## உட்பொதிந்தவை


| | |
|---|---|
| செல்வம் | ... 05 |
| 1. பணத்தின் குணம் | ... 08 |
| 2. பாராட்ட முடியுமா? | ... 17 |
| 3. நன்மைகள் | ... 23 |
| 4. தீமைகள் | ... 26 |
| 5. போதுமா? | ... 34 |
| 6. மருந்து தேவையா? | ... 41 |
| 7. வரலாற்றில் ஒரு பகுதி | ... 57 |


# செல்வமும் வாழ்வும்

புகழுக்குரிய நாயனே! மனிதனுக்கு விரிவான வருமானத்தைக் கொடுத்து அவனை வாழ வைத்திருக்கும் வல்லவனே! நம்பிக்கை இழந்த மானிடனின் துன்பங்களைத் துடைக்கும் தனியோனே! உன்னை நான் பாராட்டுகிறேன். நீ மனிதனைப் படைத்து உணவளித் தாய்; பரந்து விரிந்த வையகத்தில் பல்லாயிரம் விதமான உணவு வகைகளை உற்பத்தி செய்தாய். சூழல்களை மாறவைத்து மனிதனைப் பரிசோதனை செய்யும் இறைவனே! உன்னை எங்களால் எப்படிப் பாராட்டாம லிருக்க முடியும்? செல்வம், வறுமை - இன்பம், துன்பம் முதலான இரட்டைச் சூழல்களில் எங்களைச் சிக்கவைத்து இறுதியில் உதவி செய்யும் உன்னுடைய பேரன்பை எங்களால் எப்படி மறக்க முடியும்?

பெருமானாருக்கும் நபிப் பரம்பரையினருக்கும் நபித் தோழர்களுக்கும் உன் அன்பு எப்போதும் நிலைத்து நிற்குமாக!

உலகம் கவர்ச்சிகரமான ஒரு பொருள். அதில் இன்பங்கள் குவிந்து கிடப்பதுபோல் துன்பங்களும் தேங்கிக் கிடக்கின்றன. உலக வாழ்வைப் பொறுத்தமட்டில் எவராலும் பணத்தின் தேவையை மறுத்துவிட முடியாது. ஒவ்வொரு மனிதனுக்கும் பணம் தேவைப்படுகிறது. அவன் ஓடுவது, ஆடுவது, செயலாற்றுவது எல்லாம் பணத்தின் தூண்டுதலால்தான். பணத்தின் சிறப்பு அத்தனை உயர்வானது. அதே நேரத்தில், பணத்தினால் ஏற்படும் விளைவுகளையும் நம்மால் ஒதுக்கி வைத்துவிட முடியாது. தன் தேவைக்குப் போதிய பணம் கிடைக்காத போது, மனிதன் குறுக்கு வழியில் பிரவேசிக்க முற்படுகிறான். வறுமையின் கொடுமையைத் தாங்கிக் கொள்ளத் தெரியாத பலர் வறுமையின் அடிப்படையிலேயே தவறு செய்வதை நீங்கள் பார்த்திருக்கலாம்.

பணமில்லாதவர்கள் மட்டும்தானா இப்படிச் சிரமப்படுகிறார்கள்? இல்லை. பணம் வைத்திருப்பவர்கள் இன்னும் அதிகமாகச் சிரமப்படுகிறார்கள். பெட்டியில் இருக்கும் பண முடிப்புக்கள் அவர்களுக்குப் பகைமையைத் தேடித் தருகின்றன. சில வேளைகளில் பணம் உயிருக்குக்கூட ஆபத்து ஏற்படுத்தி விடுகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால், பணத்திலிருந்தே பல நன்மைகள் உருவாகின்றன. பணத்தை அடிப்படையாக வைத்து அரிய சாதனைகள் பலவற்றைச் சாதிக்க முடியும். உங்கள் கையிலிருக்கும் பணம் இப்படிப் பயன்படுகிறது என்றால் நீங்கள் பாராட்டுக்குரியவர். உங்கள் பணம் முரண் வழியில் உங்களுக்கு ஆர்வத்தைத் தோற்றுவித்தால் நீங்கள் எச்சரிக்கை செய்யப்படுவதற்குத் தகுந்தவர்.



பணத்தில் நன்மை இருப்பதுபோல் தீமையும் இருக்கிறது என்று எல்லோருக்கும் தெரியும். வாதம் செய்து தீர்மானிக்க வேண்டிய பிரச்சினையல்ல இது. ஆனால் ஏற்படும் நன்மைகளையும் தீமைகளையும் பிரித்தறிந்து செயல்படுவது மிகச் சிரமமான ஒரு காரியம். தெளிந்த மனமும் தீர்மானம் நிறைந்த கண்ணோட்டமும் பெற்ற ஒரு சிலரைத் தவிர்த்து மற்றவர்கள் அனைவரும் இங்கு பின் தங்கித்தான் நிற்கிறார்கள். அத்தகையவர்களுக்கு இந்த நூல் பெரிதும் பயன்பட வேண்டும் என்பது என் எண்ணம். எனவே இங்கு நான் தனிப்பட்ட முறையில் பிரச்சினையை விரிவாக ஆராய வேண்டும்.

''இம்மையும் மறுமையும்'' எனும் நூலை நீங்கள் படித்திருக்கலாம். அதில் ஆங்காங்கே பொருளாதாரம் கலந்திருப்பதை நான் மறுக்கவில்லை. என்றாலும் பொருளாதாரத்தைத் தலைப்பாக வைத்து அந்த நூல் நிச்சயமாக எழுதப்படவில்லை. உலகிலுள்ள இன்ப துன்பங்கள் அத்தனையும் அங்கு அலசி ஆராயப்பட்டிருக்கின்றன. அந்த நூலில் இடம் பெற்றிருக்கும் பொருளாதாரம் போதிய தெளிவைக் கொடுக்காது என்னும் எண்ணத்துடனேயே இந்த நூலைத் தனிப்பட்ட முறையில் எழுதுகிறேன்.

ஆகவே இந்த நூலில் பொருளாதாரம் பற்றிய பிரச்சினைகள் அனைத்தையும் நாம் ஆராயவேண்டும். அந்த ஒன்றைத் தவிர்த்து வேறு எந்தப் பிரச்சினைக்கும் இந்த நூலில் இடம் இருக்கக்கூடாது.

# 1. பணத்தின் குணம்

பணத்திலிருந்து மனித சமுதாயத்திற்குக் கிடைக்கும் நன்மைகள் பல இருந்தாலும், அதிலிருந்து தவிர்க்க முடியாத ஒரு விபரீதம் முளைக்கிறது. அந்த விபரீதத்தை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது பணத்தினால் கிடைக்கும் நன்மையைவிட, பணத்தினால் உருவாகும் தீமை வலிமை மிக்கது என்றே தீர்மானிக்க வேண்டி யிருக்கிறது.

பொருளாதாரம் குறித்து இறைவனின் கருத்துக்களை அடியில் ஆராய்வோம்.

''நம்பிக்கையாளர்களே! உங்கள் செல்வமும் உங்கள் பிள்ளைகளும் இறைத் தியானத்திலிருந்து உங்களைத் திருப்பிவிடக் கூடாது. அப்படிச் செய்கிறவர்கள் இறுதி யில் வருந்த வேண்டி ஏற்படும்!'' எனும் கருத்தைத் திருமறை நம் நெஞ்சில் தெளிக்கிறது.

இறைத் தியானம் என்பது என்றைக்கும் மறக்க முடியாத ஒன்று. நோட்டுக் கற்றைகளை எண்ணிப் பார்த்து மகிழ்கிறவர்கள் - குழந்தைச் செல்வங்களைக் கொஞ்சி விளையாடி பொழுது போக்குகிறவர்கள் என்றைக்குத்தான் இறைவனை நினைத்துப் பார்க்கப்



போகிறார்கள்? பணத்தை எண்ணிப் பார்ப்பது தவறல்ல. குழந்தையைக் கொஞ்சி விளையாடுவதும் குற்றமல்ல. என்றாலும் இந்த இன்ப நுகர்ச்சியில் இறைவனை மறந்து விடக் கூடாது என்பதே இந்த இறைவசனத்தின் கருத்து.

இந்த இறைவசனம் செல்வத்தால் விளையும் முதல் விபரீதத்தைத் தெளிவுபடுத்துகிறது. இந்த உண்மையை மற்றொரு வசனம் இப்படிச் சுட்டிக் காட்டுகிறது: ''உங்கள் செல்வமும் உங்கள் குழந்தைகளும் உங்களுக்குச் சோதனைகளே. இறைவன் உங்களுக்கு அளிக்கவிருக்கும் நற்கூலி மகத்தானது.''

பிறிதோரிடத்தில் வேறொரு வசனம் இப்படி எச்சரிக்கை செய்கிறது: ''பொருளைச் சேர்த்துச் சேர்த்துத் தான் நீங்கள் வீணானீர்கள்!''

உங்களையே நீங்கள் உற்றுப் பாருங்கள்! உங்களைச் சுற்றி நடக்கும் அட்டூழியங்களை எண்ணிப் பாருங்கள்! பொறுப்பாளிகளிடம் தோன்றும் ஊழல்களைக் கவனித் துப் பாருங்கள்! அவை அத்தனையும் பணத்தால் தான் உண்டாகின்றன. ஒரு மனிதனின் உள்ளத்தில் பொருளாசை தோன்றும்போது அவன் செய்யும் செயல் களில் நம்மால் நேர்மையைக் கண்டுபிடிக்க முடியாது. இதனால்தான் பெருமானார் (ஸல் அவர்கள்) பொருளாசையையும் பதவி மோகத்தையும் இரண்டு ஓநாய்கள் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள்.

''ஓர் ஆட்டு மந்தையில் இரண்டு ஓநாய்கள் புகுந்தால் என்ன விபரீதம் ஏற்படும்? அதைவிடப் பெரிய விபரீதம் ஒரு மனிதனின் மனத்தில் பொருளாசையும் பதவி மோக மும் நுழையும்போது ஏற்படும்'' என்று அவர்கள் குறிப்பிட்டிருப்பது உங்கள் சிந்தனைக்குரியதாகும்.

''தண்ணீரிலிருந்து புற்பூண்டுகள் முளை விடுவது போல் பொருளாசையிலிருந்து துரோக மனப்பான்மை முளைவிடுகிறது!'' என்று பெருமானார் (ஸல் அவர்கள்) மற்றோரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''என்னைப் பின்பற்றும் பெருங் குடி மக்களில் ஒரு சாரார் தோன்று வார்கள்: ருசிமிக்க உணவு வகைகளை அவர்கள் சாப்பிடு வார்கள்; உயர்ந்த ரக குதிரைகளைப் பிரயாணத்திற்கு வைத்துக் கொள்வார்கள்; அழகிய பெண்களை மணப் பார்கள்; விலையுயர்ந்த ஆடைகளை அணிவார்கள். அவர் களின் வயிறுகள் கிடைத்த உணவில் திருப்தியடைய மாட்டா; அவர்களின் உள்ளங்கள் குவிந்த செல்வத்தைப் பார்த்துப் 'போதும்!' என்று கூறமாட்டா! உலக இன்பங் களைத் தேடித் திரியும் அவர்கள் உலகத்திற்காகவே உயிர் வாழ்வார்கள். அவர்களைப் பொறுத்த மட்டில் உலகத்திற்கு அப்பால் ஒன்றுமே கிடையாது. இறைவனை மறந்து நிற்கும் அவர்கள் உலகத்தையே தமது நாயகனாக்கிக் கொள்வார்கள்...''

உலகில் வாழ வந்திருக்கும் மனிதன் உலகத்திற்கு அப்பாலுள்ள வாழ்வை என்றும் மறந்துவிடக் கூடாது. உலகில் மனிதனை வாழ வைத்திருக்கும் இறைவனின் தீர்ப்பு அது. உலக வாழ்வையே லட்சியமாகக் கொண்டு செயல்படுவது மனிதனின் சிறப்பிற்கு இழுக்குக் கற்பிப்ப தாகும். மேலேயுள்ள நபிக் கருத்தில் இந்த உண்மை விளக்கப்படுகிறது.

இதோ மீண்டும் பெருமானார் (ஸல்) அவர்கள் பேசு கிறார்கள் ''உலக வாழ்க்கைக்கென்றே சிலர் இருக்கிறார் கள்; அவர்களிடம் அதை விட்டு விடுங்கள்! உலகிலிருந்து ஒரு மனிதன் தன்னுடைய தேவைக்குமேல் அதிகமாக எடுத்துக் கொண்டால், அவன் அதற்கு இறைவனிடம் தண்டனை அனுபவித்தே ஆக வேண்டும்.''



''மனிதன் அலறுகிறான்; 'என் பொருள் ! என் பொருள்!' என்று அவன் சத்தம் போடுகிறான். அவன் பொருளாம்! அப்படி ஒன்று எங்குமில்லை. அவன் தின்று தீர்த்தது, அணிந்து வீணாக்கியது முதலியவற்றைத் தவிர்த்து அவனுக்கென்று தனிப்பட்ட முறையில் எந்தப் பொருளுமில்லையே!'' இதுவும் பெருமானார் (ஸல் அவர்கள்) கருத்துத்தான்.

''நாயகம் அவர்களே! மரணத்தை என் மனம் வெறுக் கிறதே. காரணம் என்ன?'' என்று நபித்தோழர் ஒருவர் கேட்டார்.

பெருமானார் (ஸல்) அவர்கள் பளிச்சென்று திருப்பிக் கேட்டார்கள். ''உம்மிடம் பணம் இருக்கிறதா?''

நபித் தோழர் ஆமோதித்தார்.

இது பெருமானார் (ஸல்) அவர்கள் விடை: ''அப்படி யானால் உம் பணத்தை முதலில் இறைவழிக்குச் செலவு செய்யும்! அப்புறம் அதைத் தொடர்ந்து அதே வழியில் மகிழ்ச்சியோடு நீரும் பிரவேசிக்கலாம். மனிதனின் உள்ளம் பணத்துடன் பிணைந்து நிற்கிறது. அதை இங்கே வைத்து விட்டு அங்கே செல்வதற்கு அவன் மனம் இடம் தராது!''

''மனிதனுக்கு மூன்று துணைகள்'' என்று மற்றொரு சமயம் கூறினார்கள். ''ஒன்று, மரணம் வரை துணை நிற்கும் - இது பணம். மற்றொன்று மண்ணறை வரை துணை நிற்கும் - இதுமனைவி . மூன்றாவது, இறுதி வரை துணை நிற்கும் - இது நற்செயல்.''

பெருமானார் (ஸல்) அவர்கள் மட்டுமன்றி ஈஸா நபியவர்களும் பணத்தைத் தாழ்த்தியே மதித்திருக்கிறார்கள்.

''நீங்கள் நீர்மீது நடந்து செல்கிறீர்கள். எங்களால் அப்படி நடக்க முடியவில்லையே. காரணம் என்ன?'' என்று ஒரு வினாவை நண்பர்கள் எழுப்பினார்கள்.

ஈஸா நபி அவர்கள் புன்னகை பூத்தார்கள். 'வெள்ளி யையும் தங்கத்தையும் நீங்கள் எப்படி மதிக்கிறீர்கள்?''

''அவை நல்ல பொருள்கள்; உயர்த்தி மதிக்கிறோம்!'

மீண்டும் ஒரு புன்னகை பிறந்தது. ''நான் அப்படி மதிக்க வில்லை. என்னைப் பொறுத்த வரையில் வெள்ளி - தங்கத்திற்கு மண்ணாங்கட்டிக்கும் வேற்றுமை கிடையாது. நான் நீர்மீது நடந்து செல்வதற்கு இது தான் காரணம்!''

நபித் தோழர் அபூதர்தாவிற்கு சல்மான் பார்ஸீ எழுதிய கடிதத்திலிருந்து ஒரு பகுதி அடியில் இடம் பெறுகிறது.

''உலகிலிருந்து நீங்கள் அடையும் இன்பங்கள் ஒவ் வொன்றிற்கும் நன்றி செலுத்தியே ஆகவேண்டும். எச்ச ரிக்க விரும்புகிறேன். உங்களால் நன்றி செலுத்த முடியாத எந்த இன்பத்தையும் உலகிலிருந்து எடுக்காதீர்கள்!''

துறவறம், வறுமை குறித்து இரண்டு நூல்கள் எழுதி யிருக்கிறேன். அவற்றில் ஆங்காங்கே பொருளாதாரம் பற்றியும் எழுதியிருக்கிறேன்.உலக இன்பத்தை வெறுக் கும்போது துறவறம் தோன்றுகிறது. செல்வம் பறிக்கப் படும்போது வறுமை வலிய வருகிறது. எனவே அந்த நூல்களில் உலக இன்பத்தையும் பணத்தையும் பின்னி வைத்துச் சில விவரங்களை எழுதியிருக்கிறேன். அவை உங்களுக்குப் பயன்படலாம்.என்றாலும் எழுதியதையே திரும்ப எழுத விரும்பாததால் இத்துடன் நிறுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

பணம் என்பது யாருக்கும் தவிர்க்க முடியாத தேவை தான். ஒரு மனிதன் இறந்ததும் மக்கள் என்ன



கேட்கிறார்கள் தெரியுமா? இதோ பெருமானார் (ஸல்) அவர்கள் விளக்குகிறார்கள்.

''ஒரு மனிதன் இறந்ததும் வானவர்கள், 'அவன் எவ்வளவு தர்மம் செய்திருக்கிறான்?' என்று கேட் கிறார்கள். மக்களோ, 'அவன் எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறான்?' என்று கேட்கிறார்கள்.''

பணம் என்பது சக்திமிக்க ஒரு பொருள்தான். என்றாலும் செலவு செய்வதற்காகவே மனிதன் சம்பாதிக் கிறான். யாருக்கும் பயன்படாமல் பெட்டியில் முடங்கிக் கிடக்கும் பணம் சிறப்பை இழந்து விடுகிறது. மனிதன் தான் சம்பாதித்த பணத்தை வைத்துத் தர்மம் செய்ய வேண்டும். அந்தத் தர்மம் அவனுக்கு வானவர்களிடம் மதிப்பைக் கொடுக்கும். ஆனால் அவனுடைய உற்றார் உறவினருக்கு அதைப் பற்றிக் கவலை கிடையாது. அவன் சிரமப்பட்டுச் சேர்த்து வைத்திருப்பதைப் பங்கு போடுவதுதான் அவர்களின் குறிக்கோள். எனவே, 'அவன் எவ்வளவு பணம் சேர்த்து வைத்திருக்கிறான்?' என்று கேட்கிறார்கள். அதாவது பங்கு போட்டால் தமக்கு எவ்வளவு கிடைக்கும் என்று கணக்குப் போடுகிறார்கள் - இந்தக் கருத்துத்தான் மேலே சுட்டிக் காட்டப்படுகிறது.

அறிஞர்கள் பணத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து விசித்திரமானது. நபித் தோழர் அபூதர்தா, செல்வத்தை மனிதன் அனுபவிக்கும் மிகப் பெரும் துன்பம் என்றே கருதியிருக்க வேண்டும்.

ஒரு சமயம் அபூதர்தாவுக்கு யாரோ ஒருவர் சிறிது தீங்கிழைத்து விட்டார். அபூர்தர்தாவின் மனம் வேதனைப் பட்டது. இரு கரங்களையும் மேலே உயர்த்தி

இறைவனிடம் முறையிட்டார்; அந்தப் பாதகனுக்குக் கொடிய துன்பம் கொடுக்குமாறு பிரார்த்தித்தார். எப்படிப் பிரார்த்தித்தார் என்று கேட்கிறீர்களா? அடுத்து வருகிறது அவர் செய்த பிரார்த்தனை:

''இறைவனே! எல்லாம் தெரிந்த நாயகனே! எனக்கு ஒருவன் தீங்கு செய்துவிட்டான். அந்தக் குற்றத்திற்கு நீதான் தண்டனை கொடுக்கவேண்டும். எனவே அவனுக்கு முழுமையான ஆரோக்கியத்தைக் கொடு; அவன் வாணாளை அதிகப்படுத்து; அவன் செல்வத்தை விரிவு படுத்து.''

நல்ல ஆரோக்கியமும் நிறைந்த செல்வமும் சேரும் போது ஒரு மனிதன் தன்னையறியாமல் பெருந்துன்பத்தில் சிக்கிக் கொள்கிறான் என்னும் உண்மை அபூதர்தாவின் பிரார்த்தனையிலிருந்து நமக்குத் தெரிகிறது.

தெளிந்த ஞானமும் சுத்தமான கண்ணோட்டமும் பெற்றிருந்த அறிஞர் அலீ (ரலி) அவர்கள் பணத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து அடிவில் மின்னுகிறது. ஒரு நாள் அவர்கள் வெள்ளி நாணயம் ஒன்றைக் கையில் வைத்திருந்தார்கள். உள்ளங்கையில் படுத்துக் கிடந்த அந்த வெள்ளி நாணயத்தைப் பார்த்து அறிஞர் அவர்கள் இளக்காரமாகச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பைத் தொடர்ந்து வெளிவந்த வார்த்தைகளில்தான் எத்தனை சக்தி! ''நீ பயனுள்ள ஒரு பொருள்தான். ஆனால் என் கையைவிட்டு வெளியே போகும்வரை உன்னால் எனக்கு எந்த நன்மையும் செய்ய முடியாது!''

பணம் என்பது செலவு செய்வதற்காகப் படைக்கப் பட்ட ஒன்று எனும் உண்மை இங்கு மீண்டும் சுட்டிக் காட்டப்படுகிறது.



யஹ்யா பின் மஆத் என்ற அறிஞரின் வார்த்தைகளில் ஆழமான எச்சரிக்கை நமக்குத் தெரிகிறது. ''பணம் என்பது ஒரு தேள். முறைப்படி பயன்படுத்தத் தெரியா விட்டால் அதைத் தொடாதே! இல்லையேல் அது உன்னைக் கொட்டிக் கொலை செய்துவிடும்.'' - பணத்தினால் பாழானவர்களுக்கு உதாரணம் வேறு காட்ட வேண்டுமா என்ன? கைப்புண்ணுக்கு யாரேனும் கண்ணாடி பார்ப்பார்களா?

''முஸ்லிம் பெருங்குடி மக்களின் தலைவரே!'' என்று வேதனையும் பாராட்டும் கலந்த குரலில் கூப்பிட்டார் முஸ்லிமா இப்னு அப்துல் மலிக். ''நீங்கள் சாதித்தவை மகத்தானவை. உங்களுக்குமுன் வேறு யாரும் அவ்வளவு பெரிய சாதனைகளைச் சாதித்தது கிடையாது. இந்தத் துறையில் நீங்களே தனித்து நிற்கிறீர்கள். ஆனால் உங்கள் மனைவி மக்களுக்கென்று எதையும் நீங்கள் சேர்த்து வைக்கவில்லை.''

மரணப் படுக்கையில் கிடந்த உமர் பின் அப்துல் அஸீஸ் மங்கிய குரலில் பேசினார். ''என்னைப் பிடித்து உட்கார வையுங்கள்!''

அவரது குமாரர்கள் பதின்மூன்று பேரும் சூழ்ந்து நின்றார்கள். உமா கைத்தாங்கல் கொடுத்து உட்கார்த்தி வைக்கப்பட்டார். காய்ந்து போன அவரது உதடுகளுக்கு மத்தியிலிருந்து ஒவ்வொன்றாக வெளிவந்த வார்த்தைகள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டியவை.

''நீர் என்ன சொன்னீர்? என் மக்களுக்கென்று எதையும் சேர்த்து வைக்கவில்லை என்றுதானே சொன்னீர்?''

மங்கிப் போயிருந்த கண்களில் இலேசான ஒளிபடர்ந்தது. உதடுகளில் புன்னகை நெளிந்தது.

''ஆம், நீர் அப்படித்தான் சொன்னீர். முஸ்லிமா! நீர் சொன்னது சரிதான், நான் மறுக்கவில்லை. ஆனால் அதை வைத்து என்னைக் குற்றவாளியாக்கிவிட முடியாது. அவர்களுக்கு வேண்டிய உரிமை முழுவதையும் நான் கொடுத்து விட்டேன். அதில் நான் குறை வைக்கவில்லை. ஆனால் மற்றவர்களின் உழைப்பிலிருந்து கிடைக்கும் ஊதியத்தில் அவர்களுக்கு என்னால் எப்படிப் பங்கு ஏற்படுத்த முடியும்? அவர்கள் உழைக்கட்டும்; அதற்குரிய ஊதியத்தைப் பெறட்டும். நான் வேண்டாம் என்றா சொல்கிறேன்? இல்லையே! அவர்கள் இறைவனுக்கு வழிப்பட்டு நடந்தால், இறைவனே அவர்களுக்கு போதுமானவன். இறைவனுக்கு மாறு செய்வதால் ஏற்படும் துன்பங்களை அவர்கள்தான் அனுபவிக்க வேண்டும். அவர்களுக்காக நான் கவலைப்பட முடியாது!''

முஹம்மது இப்னு கஅபைப் பார்த்து ஒரு நண்பர் கேட்டார். 'உங்களுக்கு இறைவன் திரண்ட செல்வத்தைக் கொடுத்திருக்கிறான். அதை உங்கள் பிள்ளை குட்டிகளுக்காக ஒதுக்கி வையுங்கள்; இதில் தவறு என்ன?'' என்று.

முஹம்மது இப்னு கஅப் உடனே பதிலுறுத்தார்; ''எந்தத் தவறும் கிடையாது. ஆனால் அது நடக்காத காரியம். என் செல்வத்தை எனக்காகவே ஒதுக்கி வைக்க விரும்புகிறேன். இப்போது நான் தர்மம் செய்யும் செல்வம் மறுமையில் எனக்குப் பெருத்த செல்வத்தைக் கொடுக்கும்!''

# 2. பாராட்ட முடியுமா?

செல்வத்தினால் உருவாகும் தீமைகள் அளவிடற்கரியவைதான். என்றாலும் அதிலிருந்து உருப்பெறும் நன்மைகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. எனவே திருக்குர்ஆன் பொருளாதாரத்தைப் பல இடங்களில் உயர்த்தி வைத்துப் பாராட்டுகிறது. பொருளாதாரத்திற்கு இறைவன் 'நல்ல பொருள்' என்று பெயரிடுகிறான்.

இதனால்தான் பெருமானார் (ஸல்) அவர்கள், ''நல்ல மனிதனுக்கு - ஒழுக்கமுள்ள மனிதனுக்கு நல்ல செல்வம் பயன் தரவல்லது!'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தான தர்மம், ஹஜ் முதலான காரியங்களை யெல்லாம் பணமில்லாமல் எப்படி நிறைவேற்ற முடியும்? மனம் இருந்தாலும் பணம் இல்லாதவர்களால் இந்தத் துறையில் எப்படிப் பிரவேசிக்க முடியும்?

இவ்வாறு செல்வத்தின் மதிப்பு உயரும்போது வறுமையின் நிலை படுமட்டமாகி விடுகிறது. வறுமை என்பது ஒரு பிணி. அந்தப் பிணியில் சிக்கிக் கொண்டிருப்பவர்களை உறுதியாக நம்பிவிடமுடியாது. எந்த விநாடியும் அவர்கள் தவறு செய்யலாம். ''வறுமை

**மனிதனைத்** தவறு செய்ய வைக்கிறது'' எனும் நபிக் **கருத்து இ**ங்கு மிகப் பெருத்தமான ஒன்று. வறுமை யின் நிலை - அதனால் ஏற்படும் விளைவு இங்குச் சுட்டிக்காட்டப்பட்டாலும், இந்தக் கருத்தையே செல்வத் திற்குரிய பாராட்டு என்றும் நாம் வைத்துக் கொள்ள லாம்.

இப்போது உங்கள் சிந்தனைக்கு நீங்கள் வேலை கொடுக்க வேண்டும். பொருளாதாரத்தின் நோக்கம் என்ன? அதனால் விளையும் நன்மைகளும் தீமைகளும் யாவை? என்பன போன்றவற்றை நீங்கள் நன்கு ஆராயவேண்டும். அப்போதுதான் பொருளாதாரம் குறித்து உங்களால் நல்லதொரு முடிவுக்கு வர முடியும். செல்வம் எப்போது பாராட்டப் படுகிறது, எப்போது இகழப்படுகிறது என்ற உண்மைகளெல்லாம் நீண்ட சிந்தனைக்குப் பிறகுதான் தெளிவுபட முடியும்.

பணம் என்பது ஒரு பொருள். உலகிலுள்ள கோடி கோடியான பொருள்களில் அதுவும் ஒன்று. அது நல்லது மல்ல; கெட்டதுமல்ல; அதில் துர்நாற்றமும் கிடையாது; நல் மணமும் கிடையாது. உங்கள் கையிலிருக்கும் பணத்திலோ உங்கள் கையிலிருக்கும் நோட்டுக் கற்றை யிலோ எந்த நன்மையும் கிடையாது; எந்தத் தீமையும் கிடையாது - அவை இடம் மாறாமல் அங்கேயே இருந்தால்,

ஆனால் அந்தப் பணம் கையை விட்டு வெளியில் போகும்போது - ஒன்று, நன்மை விளைகிறது அல்லது தீமை முளைக்கிறது. இது பணத்தால் ஏற்படும் விளைவு. இந்த விளைவை வைத்துத்தான் பணம் கணிக்கப் படுகிறது. உங்கள் பணம் சமுதாயத்திற்கு நன்மை செய் கிறதா? அப்படியானால் உங்கள் செல்வம் பாராட்டுக்



குரியது. உங்கள் செல்வத்திலிருந்து பல தீமைகள் விளைகின்றனா? அப்படியானால் உங்களுக்குச் செல் வத்தைவிட வறுமை பயன்தர வல்லது. இப்படி விளைவை பார்த்துத்தான் எதையும் தீர்மானிக்க வேண்டும். எடுத்த எடுப்பில் செல்வத்தைப் பற்றி எதுவும் சொல்வதற்கில்லை.

உலகிலுள்ள பொருள்கள் அத்தனையும் ஒவ்வொரு நோக்கத்திற்காகவே படைக்கப் பட்டிருக்கின்றன. இயற்கைப் பொருள்களில் போலவே செயற்கைப் பொருள்களிலும் இந்த உண்மை இருக்கிறது. இந்தப் பொது நியதிக்குப் பணம் மட்டும் எந்த விதத்திலும் விதி விலக்கல்ல என்பதை நீங்கள் முதலில் உணர வேண்டும்.

இந்த உலகில் கோடி கோடியான இன்பங்கள் நிறைந்து கிடந்தாலும் மறுமையின் இன்பங்களுக்கு அவை எந்த விதத்திலும் நிகரானவையல்ல. முந்தியவை கால ஓட்டத்தால் அழியக்கூடியவை. பிந்தியவை காலத் தைக் கடந்து நின்று பயன் தருபவை. எனவேதான் பெருமானார் (ஸல்) அவர்கள், ''மரணத்தை அடிக்கடி எண்ணிப் பார்க்கிறவனே - மரணத்திற்குத் தயாராக இருப்பவனே உங்களில் சிறந்தவன்'' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏனெனில் மரணம் என்பது மறுமைக்குச் செல்லும் ஒரே வழி.

இந்த மறுமை வெற்றி உங்களுக்கும் எனக்கும் மட்டுமின்றி எல்லோருக்கும் அவசியமான ஒன்று.

இந்த வெற்றிக்கு நீங்கள் ஆசைப்பட்டால் முதலில் உங்கள் மனத்தைப் பண்படுத்திக் கொள்ளுங்கள்! உயர்ந்த குணத்தையும் சிறந்த அறிவையும் சிரமப்பட்டுத் தேடியடையுங்கள்! இரண்டாவதாக, உடல் நிலையில் வியாதிக்கு இடம் கொடுக்காதீர்கள்! உடலை எப்போதும்

ஆரோக்கியத்துடன் வையுங்கள்! நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம். நோயாளிகளால் ஓயாமல் உழைக்க முடியாது; உருப்படியாகச் சாதனை புரிய முடியாது. மூன்றாவதாக, திரை கடலோடியும் திரவியம் தேடுங்கள்! வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் வாங்கிக் கொள்ளுங்கள்!

பணம் என்றால் என்ன? அது நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. என்றாலும் பொதுவாகத் தங்கத்திலும் வெள்ளியிலும் தான் நாணயம் தயாரிக்கப்படுகிறது. தங்கமும் வெள்ளியும் நமக்கு மண்ணுக்கடியிலிருந்து கிடைக்கின்றன. கல்லைப்போல் மண்ணைப்போல் அவை இரண்டு பொருள்கள். அவற்றை யாரும் மதிக்க வில்லையெனில் அவற்றிற்கும் மண்மாங்கட்டிக்கும் வேற்றுமை கிடையாது.

என்றாலும், அது மனிதனின் வாழ்வில் பெரிதும் பங்கு கொண்டிருக்கிறது. வாழ்வின் எந்தக் கோணத்தி லிருந்து பார்த்தாலும் பணத்தின் தேவை தவிர்க்க முடியாததுதான்.

அது மனிதனின் ஊழியன். மனிதனின் தேவைகளை எல்லாம் அது முடித்துக் கொடுக்கிறது. உணவு, உடை, இல்லம் முதலான அத்தியாவசியத் தேவைகளைப் பணமின்றி எப்படிச் சாதிக்க முடியும்? உலகில் வாழும் ஒருவன் இந்த மூன்று தேவைகளையும் முழுக்க ஒதுக்கி வைத்துவிட முடியுமா?

உங்கள் பணத்தினால் நீங்கள் இப்படிப் பயனடைய எண்ணுவது குற்றமல்ல. பயனடைவது தவறல்ல. இன்னும் சொல்லப் போனால் உங்கள் பணம் இப்படிப் பயன்பட்டால் அது உண்மையில் சிறப்பிற்குரியதுதான்; சந்தேகம் கிடையாது. எனவே நியாயமான வழிக்குப் பயன்படுத்தும் எண்ணத்துடன் பணத்தைத் தேடுங்கள்!



ஆனால் கையில் பணம் வந்ததும் அதை முரண் வழிக்குப் பயன்படுத்தத் தொடங்கிவிடாதீர்கள்! நல்வழிக்குப் பயன்படும் அதே பணம் முரண்வழிக்கும் பயன்படலாம். பணத்தில் ஒன்றுமில்லை. மேலே நான் சொன்னதுபோல், நல்லதுமல்ல, கெட்டதுமல்ல. நீங்கள் அதனைப் பயன்படுத்தும் முறையில் தான் எல்லாம் இருக்கிறது,

உங்கள் பணம் முரண்வழிக்குச் செல்லும்போது அது உங்கள் அறிவையும் பண்பையும் ஆழமாகப் பாதிக்கும்; மறுமையின் வெற்றிக்கு ஆட்டத்தை ஏற்படுத்தும். இந்தக் கட்டத்தில் உங்கள் பணம் இழிவை அடைகிறது. தீமை விளைவிக்கும் பணத்தைப் பாராட்டும் துணிவு யாருக்குத்தான் இருக்க முடியும்? குற்றவாளியை நிரபராதி என்று நிரூபிக்கும் பணத்தை நல்ல மனம் படைத்த யார்தான் வரவேற்கப் போகிறார்கள்?

இந்த உலகமும் அதிலுள்ள இன்பங்கள் அனைத்தும் உங்களுக்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. தேவை யின் அளவிற்கு அவற்றை உபயோகித்துக் கொள்ளுங்கள்! தேவைக்குமேல் வைத்து இறுதியில் வேதனையடையா தீர்கள்! ''உலகிலிருந்து ஒரு மனிதன் தன்னுடைய தேவைக்கு மேல் அதிகமாக எடுத்துக் கொண்டால் அவன் அதற்கு இறைவனிடம் தண்டனை அனுபவித்தே ஆகவேண்டும்!'' எனும் நபிக் கருத்தை இங்கு நீங்கள் நினைவு கூர வேண்டும்.

ஆனால் மனிதனின் இயல்பை அடிப்படையாக வைத்து ஆராய்ந்து பார்க்கும்போது திடுக்கிடும் உண்மை ஒன்று நமக்கு முன்னால் வருகிறது. மனிதனுக்கு இறை வழியில் ஆர்வம் கிடையாது. நூற்றில் ஒருவர் ஆயிரத்தில் இருவர் என்று சிலர் இறைவழியில் லயித்திருக்கலாம். ஆனால் அவர்கள் சிறுபான்மையோர். சிறுபான்மை யோரை ஆதாரமாக வைத்துப் பெரும்பான்மை யோருக்குத் தீர்ப்பு வழங்குவது முறையல்ல.

நல்ல செயலையும் இறை பணியையும் பார்த்து மனிதன் வெறுப்படைகிறான். அவற்றைக் கட்டோடு மறந்துவிட்டு ஆனந்தமாகப் பொழுது போக்குவதற்குப் பணம் பெரிதும் பயன்படுகிறது. பணம் கொடுக்கும் இன்பம் எல்லையற்றது. அதனால் விளையும் இழப்பு ஈடுகட்ட முடியாதது. இதனால் தான் திருத்தூதர்களில் பலர் பணத்தை வெறுத்தார்கள்; வறுமையையும் துற வறத்தையும் விரும்பி வரவேற்றார்கள்.

உண்மையில் ஒரு சமயம் பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த பிரார்த்தனைக்கும் இதுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

''இறைவனே! மக்களிடம் உதவி கேட்காமல் கையிலிருப்பதை வைத்துத் திருப்தியோடு வாழும் மனப் பான்மையை என்னுடைய சமுதாயத்திற்குக் கொடுத் தருள்வாயாக!''

பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த மற்றொரு பிரார்த்தனை அடுத்து இடம் பெறுகிறது; ''இறைவனே! என் வாணாளில் வறுமை நிலவி நிற்க உதவி செய்வா யாக! வறுமையோடு மரணிப்பதற்கு அருள்பாலிப் பாயாக! மறுமையிலும் நான் ஏழைகளோடுதான் இருக்க வேண்டும். அருள் புரிவாயாக!''

''எனது நாயகனே! தங்கம், வெள்ளி எனும் கற்களை நானும் வணங்கக் கூடாது. என் சந்ததியினரும் வணங்கக் கூடாது. எங்களைக் காத்தருள்வாயாக!'' - இது இப்ராஹீம் நபி இறைவனிடம் வேண்டிக் கொண்ட பிரார்த்தனை.

இப்போது நாம் பணத்தால் ஏற்படும் நல்ல விளைவுகளைச் சற்று விரிவாக ஆராய வேண்டும்.

# 3. நன்மைகள்

பொருள் என்பது இம்மைக்கும் மறுமைக்கும் ஏக காலத்தில் பயன்படுகிறது. அது இம்மைக்கு எப்படி யெல்லாம் பயன்படுகிறது என்று நாம் விளக்க வேண்டிய தில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விவரம். அதில் பல்லாயிரம் நன்மைகள் மறைந்திருப்பதால்தான் பாய்ந்து விழுந்து மக்கள் பொருள் தேடுகிறார்கள்.

மறுமையின் வெற்றியைப் பொறுத்த வரையில் பொருளாதாரம் மூன்று விதங்களில் பயன்படுகிறது.

1. இறை வணக்கமும் புனிதமான காரியங்களும் சிறப்பு மிக்கவைதாம். என்றாலும் இவற்றை முறைப்படி நிறை வேற்றுவதற்கு நல்ல ஆரோக்கியம் தேவை. ஆரோக்கியத்திற்கு நல்ல உணவு மட்டுமின்றி நல்ல இல்லமும் தேவைப்படுகிறது. நோய் நொடி தோன்றும் போது வைத்தியம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. இந்தக் காரியங்களை எல்லாம் பண மில்லாமல் செய்து முடிப்பது சாத்தியமில்லை, எனவே இறைவணக்கத்திற்கும் புனிதமான இதர காரியங் களுக்கும் பணம் என்பது தவிர்க்க முடியாது ஒன்று.

மக்காவின் தேவாலயப் பிரயாணம், மக்கள் துயரைத் துடைப்பதற்கென்று செய்யப்படும் தானதர்மம் முதலிய

காரியங்கள் மார்க்கத்தின் கண்ணோட்டத்தில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருக்கின்றன.இவை பணத்தினால் உருவாகும் காரியங்கள்.பணம் பெற்றவர்கள் இந்தத் துறையில் நன்கு முன்னேறலாம். பணமில்லாதவர்களுக்கு இந்தப் பேறுகள் கிடைக்க முடியாது.

மனிதனின் வாணாளில் ஒவ்வொரு கட்டத்திலும் பணம் தேவைப்படுகிறது. மனைவி மக்களை பட்டினி போடாமல் காப்பாற்றும் பொறுப்பும், சரிந்து விழுந்த வீட்டைத் தூக்கி வைத்துக் கட்டும் பொறுப்பும் அவன் தலையில் வந்து விழுகின்றன. கந்தலையும் கிழிசலையும் அணிந்து கொண்டிருக்கும் மனைவியின் கவலையைத் தீர்க்க வேண்டிய கவலையும், வளர்ந்து விட்ட மகளுக்கு மணமகன் தேடி முறைப்படி மணம் செய்ய வேண்டிய கவலையும் அவனுக்கு ஏற்படுகின்றன. இதனால் இரவும் பகலும் வேதனை அனுபவித்துக் கொண்டிருக்கும் அவனால் எப்படி முழு மனத்துடன் இறைவணக்கத்தில் ஈடுபட முடியும்? இந்தக் கவலைகளையெல்லாம் பணம் படைத்தவர்கள் அதிகச் சிரமமில்லாமல் சாதித்து விடலாம், இந்த வகையில் பணம் இறை வழிக்குப் பெரிதும் பயன்படுகிறது.

இறைவணக்கம் புனிதமானது. இறைவணக்கத்திற்கும் பணம் துணை செய்கிறது. எனவே பணத்திற்குப் புனித தன்மை ஏற்படுகிறது. இறைவணக்கத்திற்குக் குறுக்கே நிறகும் பொறுப்புகளை எல்லாம் நிறைவேற்றும் எண்ணத்துடன் பணம் தேடுவது குற்றமல்ல. பணம் சேர்ப்பதும் குற்றமல்ல.

2. உங்கள் பணம் முதல் வகையில் உங்களுக்காகவே செலவிடப்படுகிறது. அதே பணத்தை நீங்கள் மற்றவர் களுக்காகவும் செலவு செய்யலாம்.



இயன்ற அளவிற்குத் தர்மம் செய்யவும்! வறுமையில் நெளியும் மக்களுக்கு உங்கள் செல்வத்தை வாரி வழங்குங்கள்! தர்மம் என்பது அவ்வளவு முக்கியமானதா என்று கேட்க வேண்டாம். அது இறைவனின் சினத்திற்கு முட்டுக்கட்டைபோடும் ஆற்றல் படைத்தது. இது ஒன்று போதாதா- தர்மத்தின் சிறப்பை உயர்த்துவதற்கு?

சமுதாய வளர்ச்சிக்கும், ஏற்படவிருக்கும் விபரீதத் தைத் தடுப்பதற்கும் உங்கள் பணம் பயன்படலாம். நல்ல மனம் படைத்தவர்கள் இறைவணக்கத்தை மறந்து திரிகிறார்களா? அதற்கு வறுமைதான் காரணம் என்று நீங்கள் கருதினால், உடனே உதவி செய்யுங்கள்! உங்கள் உதவி அவர்களைத் திருத்தக் கூடும்.

3. உங்கள் செல்வத்தைப் பொதுப் பணிக்குச் செல விடலாம். பள்ளிவாசல் கட்டுவது, மருத்துவமனை கட்டுவது முதலான எத்தனையோ வேலைகள் செல்வத் திற்காக காத்துக் கொண்டிருக்கின்றன. உங்கள் செல்வம் இந்த வழியில் பயன் படுத்தப்பட்டால். அதனால் சமுதாய மக்கள் அடையும் நன்மைகள் அளவிடற்கரி யவை. இது சிறப்பு மிக்க சாதனை. இவற்றின் பெருமை மரணத் திற்குப் பிறகும் உங்களுக்குக் கிடைக்கும். இறைவன் உங்களுக்கு நற்கூலி அளிப்பான்; மக்கள் உங்களை நெஞ்சில் வைத்துப் பாராட்டுவார்கள்.

ஆனால், நீங்கள் செய்யும் காரியங்களில் மக்களின் கண்ணோட்டத்திற்கு இடம் கொடுத்து விடாதீர்கள்! அவர்களின் பாராட்டுக்காக நீங்கள் எதையும் செய்ய வேண்டாம். அவர்களின் தன்மையை மனத்தில் கொண்டு வேலை செய்யவும்! அவர்களிடம் வேறு எதையும் எதிர்பார்க்காதீர்கள்!

# 4. தீமைகள்

மனிதன் பலவீனமானவன். அவனிடம் எவ்வளவு உயர்ந்த சக்திகள் இருந்தாலும் அவன் பல வேளைகளில் தன்னுடைய இயலாமையை உணர்கிறான். இது ஆணுக்கும் பொருந்தும், பெண்ணுக்கும் பொருந்தும். பணமிழந்து வறுமையில் தவிக்கும்போது இறைவனை எண்ணிப் பார்த்து நல்வழி நடக்கும் மானிடன், செல்வத்தை அடைந்ததும் அனைத்தையும் ஏனோ மறந்து விடுகிறான். வறுமையின் போது மறைந்து கிடந்த அவனுடைய ஆர்வம், செல்வத்தின் போது கிளர்ந்தெழுந்து அவனைத் தூண்டுகிறது. நோயுற்றுக் கிடக்கும் போது, தான் செய்த தவறுகளை நினைத்து வேதனைப் படும் மனிதன், ஆரோக்கியம் வந்ததும் புதுப் புதுத் தவறுகளைக் கண்டுபிடித்து மற்றவர்களுக்கு அறிமுகப் படுத்துகிறான்; ஆர்வமூட்டுகிறான்.

பணம் என்பது ஒரு சக்தி. அது துவண்டு கிடக்கும் மனிதனைத் துள்ளியெழ வைக்கிறது. போதிய வசதியும் தேவையான பொருளாதாரமும் பெற்றவர்களில் பெரும் பாலோர் துணிந்து தவறு செய்வதை நீங்கள் பார்க்கலாம்.

செல்வர்களின் கண்ணோட்டம் புதிய வழியில் செல்கிறது. உலகின் இன்பங்கள், குவிந்து கிடக்கும் ருசி வகைகள் அத்தனையும் தமக்காக மட்டுமே படைக்கப்



பட்டிருக்கின்றன என்று அவர்கள் நினைக்கிறார்கள். எவனே சாதாரண உணவை ஒதுக்கிவிட்டு உயர்ந்த ரக உணவு வகைகளை உட்கொள்கிறார்கள். முன்னர் சாதாரண துணியை அணிந்த அவர்கள் இப்போது பட்டுத் துணிக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்; பழைய துணிகளைப் பார்த்து முகம் சுளிக்கிறார்கள்.

உண்மையில் இதுவும் பணத்தால் ஏற்படும் விபரீதம் தான். நல்ல உணவு சாப்பிடுவதிலும் நல்ல துணி அணிவதிலும் தவறு கிடையாது. என்றாலும், பணத்தின் தூண்டுதலால் இவற்றிற்கெல்லாம் அவ்வளவு தூரம் முக்கியத்துவம் கொடுப்பது சரியல்ல, உணவும் உடையும் மனிதனின் தேவைகளில் உள்ளன. இலட்சியத்தை அடைவதற்கு அவை துணை செய்கின்றன. அவற்றையே அவன் இலட்சியங்களாகக் கொள்ளக் கூடாது.

ஆனால் செல்வன் ஒருவன் சாதாரண உணவைச் சாப் பிட்டு சாதாரண உடையை அணிந்து, எளிய வாழ்க்கை நடத்து வது மிகச் சிரமமான ஒன்று. சிரமத்தைப் பொருட்படுத்தா மல் எவன் எளிய வாழ்க்கையை மேற் கொள்கிறானோ, அவன் உண்மையில் பாராட்டுக் குரியவன்தான்.

இப்படித்தான் சுலைமான் நபி நடந்தார்கள். திருத் தூதர்களில், அவர்கள் நிறைந்த செல்வத்திற்கு அதிபதியாக இருந்தார்கள். வேறு யாருக்கும் கிடைக்காத பேரரசும் பெருஞ் செல்வமும் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டிருந்தன. இருந்தும் அவர்கள் இறைவழியை அணுவும் பிசகாமல் பின்பற்றினார்கள் என்பது வரலாறு காட்டும் உண்மை.

''நிறைந்த செல்வம் பெற்றவன் நிரந்தரத் தேவையுள்ளவன்!'' என்று ஒரு முதுமொழியுண்டு. இது

எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை செல்வர்களின் வரலாறு உங்களுக்கு நிரூபிக்கலாம். வறுமையில் கிடப் பவனுக்கும் செல்வத்தில் புரளுபவனுக்கும் முக்கியமான வேற்றுமை என்ன என்பதை அனுபவத்தை வைத்தே நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

வறியவனுக்கு இருப்பதெல்லால் ஒரே தேவை; அடுத்தவேளை உணவு. அது ஒன்றைத் தவிர்த்து இப்போ தைக்கு வேறு எந்தத் தேவையும் கிடையாது. காலையில் கஞ்சி குடித்த ஏழை ஒருவன் எதைப் பற்றி அதிகமாகச் சிந்திக்கிறான் தெரியுமா? பகல் வேளை உணவைப் பற்றித்தான். பகலுணவுப் பிரச்சனை முடிந்ததும் அவன் மனம் இரவு வேளை உணவிற்கு என்ன செய்வது என்று யோசிக்கிறது. இதைத் தவிர்த்து அவன் சிந்தனையில் வேறு எதற்கும் இடம் கிடையாது. ஏனெனில், அவனுக்கு இருப்பதெல்லாம் ஒரே தேவை. அந்தத் தேவை முடிந்ததும், அதுபோன்ற மற்றொரு தேவை அவனுக்கு முன்னால் வந்து நிற்கிறது.

அவனுடைய தேவை அப்படி ஒன்றும் நிறைவேற்ற முடியாததல்ல. தெருவில் நடந்து செல்லும் நடுத்தர மனிதர் ஒருவரின் ஓரக்கண் பார்வை போதுமானது அவனுடைய தேவையை முடிக்க! அவர் அவனுக்கு இந்தச் சிறிய உதவியைச் செய்துவிட்டால் அவன் அடுத்த ஐந்து மணி நேரத்திற்கு யாரிடமும் உதவி கேட்கப் போவதில்லை.

செல்வர்களின் நிலை இதற்கு முற்றிலும் மாறு பட்டது. அவர்களால் தம்முடைய தேவைகளைக் குறைத் துக்கொள்ள முடியாது. குறைத்துக் கொள்ளவும் தெரியாது. அவர்களிடம் செல்வம் சேரச் சேர மற்றவர் களிடம் அவர்களுக்கு ஏற்படும் தேவைகள் அதிகப்படு



கின்றன. தம் வீட்டு வேலைகளை எல்லாம் தமக்குத் தாமாகவே ஒரு காலத்தில் பார்த்து வந்த அவர்கள் இப்போது தம் வேலைகளுக்காக நாலுபேரைக் கூலிக்கு வைத்துக் கொள்கிறார்கள்.

அடுத்த வேலை உணவு பற்றி அவர்கள் கவலைப் படுகிறார்களா? கிடையாது. ஆறு மாதத்திற்குப் பிறகு மழை காலத்தில் தேவைப்படக்கூடிய கம்பளத்தைப் பற்றிக் கவலைப்படுகிறார்கள். ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு தாம் நடத்த வேண்டிய திருமணத்தைக் குறித்துக் கவலைப் படுகிறார்கள்.

வறியவன் ஒருவன் எப்படியிருந்தாலும் சரிதான், அவனால் மற்றவர்களைப் பொருட்படுத்தாமல் உயிர் வாழ முடியுமா? முடிந்தாலும் முடியாவிட்டாலும் அது நிச்சயமாகப் பணக்காரர்களுக்குச் சாத்தியமில்லை. மற்றவர்களின் உதவியை அவர்களால் புறக்கணித்துவிட முடியாது. ஏனெனில் அவர்கள் தேவை நிறைந்தவர்கள் - தேவைகளுக்குத் துணை நிற்பவர்கள் ஏழைகள். அந்த ஏழைகளின் ஒத்துழைப்பு பணக்காரர்களுக்கு அத்தியாவ சியமான ஒன்று. இது பணக்காரர்களின் குடும்ப வாழ்க்கைக்கு மட்டுமின்றி, தொழில் வாழ்க்கைக்கும் பொருந்தும்.

எனவே, அவர்கள் மக்களின் கண்ணியத்திற்கும் தொழி லாளிகளின் பிரியத்திற்கும் தம்மை நிலைக்களனாக்கிக் கொள்ள முற்படுகிறார்கள். மனத்திலுள்ளதை வெளியில் சொன்னால் விபரீதம் ஏற்படலாம் என்று கருதுவதால் அவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசு கிறார்கள். இந்த வழியில் துளிர்த்து வளரும் தீமைகள் எண்ணற்றவை.

செல்வர்கள் சிக்கிக்கொள்ளும் இறுதியான ஆபத்து ஒன்று இருக்கிறது. அது தவிர்க்க முடியாத - அதாவது பெரும்பான்மையாகத் தவிர்க்க முடியாத ஒன்று. பணம் படைத்தவர்கள் அத்தனை பேரும் இந்தத் துன்பத்திற்குப் பலியானவர்களே. ஆயிரத்தில் ஒருவர் இதற்கு விதி விலக்காக இருக்கலாம். ஆயிரத்தில் ஓரிருவர்தான் இருக்க முடியுமே தவிர பத்தில் ஒன்பது பேர் இருக்க முடியாது. எனவே பெரும்பாலோருக்கு இந்த ஆபத்து என்றைக்கும் இருக்கத்தான் செய்கிறது.

பணக்காரர்கள் பணத்தின் சக்தியால் இறைவனையும் இறை வணக்கத்தையும் கட்டோடு மறந்துவிடுகிறார்கள். பணம் என்பது இறைவனின் அருட்கொடைகளில் ஒன்று. அது உங்களிடம் இருந்தால் நீங்கள் முறைப்படி அதைப் பயன்படுத்த வேண்டும். இறைவனை மறப்பதற்கு அது ஒரு கருவியாக மாறிவிடக் கூடாது. இறைவனின் அருட் கொடைகளை அவனுக்கு எதிராகப் பிரயோகிக்கும் உரிமை உங்களுக்கு நிச்சயமாகக் கிடையாது.

''பணத்தில் மூன்று ஆபத்துக்கள் இருக்கின்றன'' என்று ஈஸா நபி கூறினார்கள். ''பணம் சம்பாதிக்கும் வேகத்தில் மனிதன் நேர் வழியை மறந்துவிட்டு குறுக்கு வழியில் பிரவேசிக்கிறான். இதனால் அவனிடம் நியாயமற்ற வருவாய் வந்து சேருகிறது.''

நண்பர்கள் கேட்டார்கள்: ''நியாயமற்ற வழியில் சம்பாதிப்பது குற்றம்தான், ஆனால் நியாயமான வழியில் சம்பாதித்தால் அதில் தவறில்லையே?''

''தவறில்லைதான். ஆனால் அந்தப் பணத்தை அவன் நியாயமற்ற விதத்தில் - முறை கெட்ட வகையில்



செலவிடக்கூடும். இந்தக் கோணத்திலிருந்து அவன் தவறு செய்ய வேண்டி ஏற்படுகிறது!''

நண்பர்கள் மீண்டும் கேட்டார்கள், ''அவன் நியாய மான வழியிலேயே செலவிடுவதாக வைத்துக் கொண்டால்?''

ஈஸா நபி புன்முறுவல் செய்தார்கள். ''இறுதி ஆபத்து ஒன்று இருக்கிறது. அவன் செல்வம் இறைவனுக்கும் அவனுக்கும் குறுக்கே நின்று இறைவணக்கத்தைத் தடை செய்யும்!''

- இது, மேலே நான் குறிப்பிட்டதுபோல், தவிர்க்க முடியாத ஒரு நிலை. இறைவணக்கம் தெளிந்த உள்ளத்தி லிருந்து வெளிப்படும் ஒளி. இறைவணக்கத்திற்குச் சுத்தமான மனமும் தெளிவான பக்தியும் அவசியம். இவற்றை அநேகமாக வர்த்தகர்களிடம் பார்க்க முடியாது. அல்லும் பகலும் தொழில் துறையில் மூளையைக் குழப்பிக்கொண்டிருக்கும் அவர்களால் இந்தத் துறையில் வெகு தூரத்திற்கு முன்னேறிவிட முடியாது. அவர்களின் சிந்தனையை எத்தனையோ பிரச்சினைகள் அரித்துக் கொண்டிருக்கின்றன.

இறைச் சந்திப்பு ஒன்றே உங்கள் குறிக்கோளாக இருக்கட்டும். உங்கள் தொழிலையும் அதிலிருந்து கிடைக்கும் செல்வத்தையும் உங்கள் குறிக்கோளுக்குப் பயன்படுத்துங்கள்! பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொள்ளாதீர்கள்! அப்புறம் உங்கள் செயலில் பொது நலத்திற்குப் பதிலாகச் சுயநலம் தாண்டவமாடும்; பக்திக்குப் பதிலாகச் சூழ்ச்சி பரவி நிற்கும்; பண்புக்குப் பதிலாக வஞ்சகம் கைகொட்டிச் சிரிக்கும்.

பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தொழில் செய்யும் ஒருவன் காலையிலிருந்து மாலை வரை... வாணாளின் ஆரம்பத்திலிருந்து அதன் இறுதி வரை ஒரேவிதமாகவே நடக்கிறான்.

பொழுது விடிகிறது. சூழ்ச்சித் திட்டங்களை மனத்தில் ஏந்திக்கொண்டு அவன் படுக்கையிலிருந்து எழுந்து உட்காருகிறான். சரக்குகளைக் கப்பலிலிருந்து கடைக்குக் கொண்டுவரும் கூலியாட்களின் வயிற்றில் எப்படி அடிப்பது, உழைக்கிறவர்களின் சோற்றில் மண்ணை எப்படிப் போடுவது, எத்தனை சதவிகிதம் போடுவது என்றெல்லாம் எண்ணிப் பார்க்கிறான். தன்னுடன் கூட்டுச் சேர்ந்திருப்பவனை ஒதுக்கிவிட்டுத் தனித்து நின்று தனித்த இலாபம் பெறுவது எப்படி, கலப்படம் செய்யப்பட்ட பொருளை நல்ல பொருள் என்று விற்பனை செய்வது எப்படி என்பனபோன்ற பிரச்சினைகள் காலையிலிருந்து இரவுவரை அவன் எண்ணத்தில் வட்டம் போடுகின்றன. இந்த எண்ண வட்டத்திலிருந்து பயங்கரமான பல சதித்திட்டங்கள் உருவாகின்றன.

போட்ட திட்டத்தை உடனே நிறைவேற்றிவிட முடியாது. அதற்கு வாய்ப்பும் வசதியும் வேண்டும். சில தொல்லைகளும் அனுபவிக்க வேண்டி ஏற்படுகிறது.

இப்படியெல்லாம் சிரமப்பட்டுப் பொருள் தேடிய பின்னர் வேறொரு பொறுப்பு அங்கு வருகிறது. இரும்புப் பெட்டியிலிருக்கும் பணத்தைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு. அடுத்த ஊரில் திருடு நடந்தால் அவன் நடுங்கு கிறான். - இவை விளக்கத்தில் கட்டுப்படாதவை. விளை யும் விபரீதங்கள் அவ்வளவு அதிகமாக இருக்கின்றன.



இதுபோன்ற சிந்தனைக்கு அவன் தன்னுடைய நேரத் தில் பெரும் பகுதியைச் செலவிட்டே ஆகவேண்டியிருக் கிறது. இதனால் வேறு எதைப் பற்றியும் சிந்தனை செய் வதற்குத் தடை ஏற்படுகிறது.

இப்படிச் சிரமப்பட்டுச் சம்பாதித்த பணத்தை தட்டிக் கொண்டு போவதற்கு அவனைச் சற்றிலும் பலர் வட்டம் போடுகிறார்கள். இருக்கும் தொல்லைகள் போதாவென்று இப்படியொரு புதுத் தொல்லை.

நீங்களே சொல்லுங்கள் - இப்படி அல்லல்படுகிறவர் களால் இறைவனை எப்படித்தான் நினைத்துப் பார்க்க முடியும்? இறை வணக்கத்திற்கு எப்படித்தான் முக்கியத்துவம் கொடுக்க முடியும்?

எனவே, பணம் என்பது சில வேளை பயனுள்ள பல வேலைகளைச் செய்தாலும், அதே பணம் வேறு சில வேளை மனிதனை நிரந்தரத் துன்பத்திற்கு இழுத்துச் சென்றுவிடுகிறது.

# 5 போதுமா?

இந்தக் கேள்வி வேறு எந்த இடத்தில் எப்படி விடைபெற்றாலும், பொருளாதாரத் துறையில் இந்தக் கேள்விக்கு இருப்பதெல்லாம் ஒரே விடைதான்: போதாது!

எனவே போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து என்று நம்பிக்கொண்டு செயல்படுகிறவர்களை மக்கட் திரளில் அதிகமாகப் பார்க்க முடியாது. ஆனால் பொருளாதாரத் துறையில் திருப்தியுடன் வாழ்வதற்கு இதைவிட்டால் வேறு வழியே இல்லை.

இந்தத் துறையில் முன்னேற விரும்புகிறீர்களா? அப்படியானால், இருப்பதை வைத்துத் திருப்தியுடன் வாழ்வது எப்படி என்று தெரிந்துக்கொள்ளுங்கள்! மற்றவர்களிடம் எத்தகைய உதவியையும் எதிர்பார்க்கா தீர்கள்! இதற்கெல்லாம் சம்பாத்தியம் தேவை. சம்பாத்திய மில்லாமல் தனித்து நிற்பது அசாத்தியம். அதற்காக உங்கள் சம்பாத்தியத்தில் முழுக் கவனத்தையும் வைத்து விடாதீர்கள்! கொள்ளை இலாபம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் திட்டம் போடாதீர்கள்! அது உங்களுக்கு நல்லதல்ல. மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய எதையும் மேற்கொள்ளாதீர்கள்!



சொற்ப வருமானத்தின் உதவியால் எளிய உணவை உட்கொண்டு வாழ்க்கையை நடத்துங்கள்! மனத்தில் தோன்றும் பேராசை உணர்வை ஒவ்வொரு நாளாக ஒத்திப் போடுங்கள்! அந்த உணர்வுக்கு அடிமையாகி விடாதீர்கள்! பேராசை உணர்வினால் உருவாகும் கொடிய விளைவுகள் எண்ணற்றவை. அவற்றை எண்ணிப் பார்த்துத் தூய வழியில் செயலாற்றுங்கள்! பேராசையினால் பலர் அனைத்தையும் இழந்திருக்கிறார்கள். பேராசையினால் மனிதத் தனத்தை இழந்து மிருகங்களாக மாறிய பலரை நீங்கள் வரலாற்றில் காணலாம்.

''அவன் பேராசைப்படுகிறான். இரண்டு தங்கச் சுரங்கம் இருந்தாலும் மூன்றாவது சுரங்கத்திற்கு ஆசைப் படுகிறான்!'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

''இறைவணக்கம், தர்மம் முதலிய நல்ல காரியங்களுக்காகவே இறைவன் மனிதனுக்குச் செல்வத்தைக் கொடுக்கிறானே தவிர அதை முரண் வழியில் பயன் படுத்துவதற்கல்ல!'' எனும் நபிக் கருத்தை நபித் தோழர் உபை நமக்குத் தருகிறார்.

இந்தப் பேராசை உணர்வு மனிதனின் இயற்கை குணங்களில் ஒன்று. உண்மையில் இந்த உணர்வுதான் தொழில் துறையை மேலோங்கி வளர வைக்கிறது. எனவே, இந்த இயற்கை உணர்வைத் தகர்த்தெறிந்து பகுத்தறிவு காட்டும் வழியில் - திருக்குர்ஆன் கூறும் வழியில் துணிந்து நடப்பவர்கள் பாராட்டப்படுகிறார்கள். அவர்கள் வீரர்கள். ''இஸ்லாத்தைப் பின்பற்றி, கையிலிருப்பதை

வைத்துத் திருப்தியோடு வாழும் மனிதனை நான் பாராட்டுகிறேன்!'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

''பணத்தில் செல்வமில்லை; அது உன் மனத்தில்தான் இருக்கிறது!'' என்று அவர்கள் பிறிதோரிடத்தில் கூறி யிருக்கிறார்கள். ஒரு மனிதனின் வாழ்வில் பணம் மட்டிலும் மகிழ்ச்சியைக் கொடுத்துவிட முடியாது எனும் கருத்து இங்கு சூசகமாகக் கூறப்படுகிறது.

''விழுந்து விழுந்து பணம் சேர்க்காதீர்கள்!'' என்று மற்றோரிடத்தில் அவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். ''இறைவனின் திட்டப்படியே எல்லாம் நடக்கும்; அவன் பங்கு போட்டு வைத்திருக்கும் அளவுதான் உங்களுக்கும் கிடைக்கும். அதற்குமேல் எதிர்பார்க்காதீர்கள்!''

''உன் அடியார்களில் பெரிய பணக்காரன் யார்?'' என்று மூஸா நபி கேட்டார்கள்.

இறைவன் பதில் கொடுத்தான்: ''நான் கொடுத்ததை வைத்துத் திருப்தி அடைகிறவன்!''

அடியில் வருவது பெருமானாரின் கருத்து: ''ஒழுக்க முள்ளவனாக இரு; மக்களில் நீயே சிறந்த பக்தன். போதுமென்ற மனப்பான்மையுள்ளவனாக இரு; மக்களில் நீயே நன்றியுள்ளவன். உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு; நீயே உண்மையான முஸ்லிம்!''

கிராமவாசி ஒருவருக்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் அளித்த அறிவுரை அடுத்து இடம் பெறுகிறது. ''முழு மனத்தோடு இறைவனை வணங்கு! இன்று நீ பேசும் பேச்சு நாளைக்கு உனக்குத் துன்பம் தரலாம்.



எனவே எச்சரிக்கையோடு உரையாடு! மக்களிடம் எதையும் எதிர்பார்க்காதே!''

நம்முடைய வாதத்திற்கு நபித் தோழர்களின் வரலாற்றிலிருந்தும் நம்மால் ஆதாரம் காட்ட முடியும். உதாரணத்திற்குச் சில அடியில் இடம் பெறுகின்றன.

''ஆசை என்பது ஒருவித வறுமை. யாரையும் எதிர் பார்க்காமல் வாழ்வது ஒருவிதச் செல்வம்!'' என்று உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள். ''மக்களிடம் எதையும் எதிர்பார்க்காதவன் மக்களில் யாரையும்விடப் பணக் காரன்!''

முஹம்மது இப்னு வாஸிவு என்ன செய்தார் தெரியுமா? காய்ந்த ரொட்டியைத் தண்ணீரில் ஊற வைத்துச் சாப்பிடுவாராம். சிக்கனத்தின் சிறப்பைக் காட்டுவதற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டுமா? இப்படி ஊற வைத்துச் சாப்பிடும் அவர் சொன்ன வார்த்தைகள் இவை: ''ஒரு மனிதன் இப்படி நடந்து கொண்டால் அவனுக்கு வேறு யாருடைய உதவியும் தேவைப்படாது.''

''உங்களிடம் ஏதேனும் சொத்து இருக்கிறதா?'' என்று ஒருவர் கேட்டார். கேட்கப்பட்டவர் ஒரு தத்துவஞானி.

அவர் இப்படிப் பதில் சொன்னார். ''ஏன் இல்லை? வெளியிலே செயல், உள்ளத்திலே உறுதி, மற்றவர்களிடம் அவநம்பிக்கை இவைதான் என் சொத்து.'' எடுத்ததற் கெல்லாம் மற்றவர்களை நம்பிக்கொண்டிருப்பது அறிவுடைமையல்ல என்பது கருத்து.

அறிஞர் ஷஅபீ ஒரு கதை சொல்கிறார். அதில் திணித்து வைக்கப்பட்டிருக்கும் தத்துவக் கருத்துக்கள் உங்கள் கவனத்திற்குரியவை.

வேட்டையாடப்போன ஒருவன் ஒரு குருவியைப் பிடித்தான். அது வாயுள்ள குருவி. எனவே அது பேசிற்று. ''என்னைப் பிடித்து வைத்திருக்கிறாயே, இதனால் இலாபம் என்ன? என்னை என்ன செய்யப்போகிறாய்?''

''உன்னை அறுத்துக் கறியாக்கிச் சாப்பிடப் போகிறேன். இதுகூட உனக்குத் தெரியாதா?''

சிட்டுக் குருவி சிரித்தது. பேசும் குருவிக்குச் சிரிக்கவும் தெரியும். ''நான் சிட்டுக் குருவி. உன் பசிக்கு நான் எம்மாத்திரம்! ஆனால் ஒன்று, என்னை விட்டுவிடு! அதற்குப் பதிலாக மூன்று உண்மைகளைச் சொல்லித் தருகிறேன். ஆனால் மூன்றையும் ஒரே சமயத்தில் சொல்லிக் கொடுக்க முடியாது. முதல் உண்மையை உன் கையில் இருந்தபடியே சொல்கிறேன். இரண்டாம் உண்மையை அந்த மரத்தில் உட்கார்ந்துகொண்டு சொல்கிறேன்.''

வேட்டைக்காரன் ஒப்புக்கொண்டான், ''எங்கே, முதல் உண்மையைச் சொல், பார்க்கலாம்!''

குருவிக் கூறிற்று: ''கைவிட்டுத் தவறிப்போன இன்பம் குறித்துக் கவலைப்படாதே!''

''பேஷ்!'' என்றான் அவன். சிட்டுக் குருவி பறந்து சென்று மரத்தில் உட்கார்ந்தது.

''இரண்டாம் உண்மை எங்கே?''

குருவி கூறிற்று: ''நடக்க முடியாததை நடக்கும் என்று எதிர்பார்க்காதே!''

விறுக்கென்று பறந்து சென்று குருவி மலை உச்சியில் போய் அமர்ந்தது. மலையடியில் நின்று மனிதன்



அலறினான், ''ஏய் சிட்டுக் குருவி! எங்கே மூன்றாவது உண்மை? சொல் சீக்கிரம்!''

குருவி நம்பிக்கைத் துரோகம் செய்யவில்லை. ஏனெனில் அது மனிதனின் பிறப்புரிமை, மலை உச்சியிலிருந்து அது கொடுத்த பதில் தெளிவாகக் கேட்டது. ''மூடனே! கேடு கெட்டவனே! என்னை மட்டும் நீ அறுத்திருந்தால் என் குடலிலிருந்து இரண்டு ஆணி முத்துக்கள் உனக்குக் கிடைத்திருக்கும். கடலை என்று நினைத்து ஒரு சமயம் அந்த இரண்டு முத்துக்களையும் விழுங்கி விட்டேன். ஒவ்வொரு முத்தும் இருபது ரூபாய் எடை இருக்கும்.''

வேட்டைக்காரன் வேகமாக அலறினான். ''மூன்றாம் உண்மையைச் சொல்! என்னை விட்டு உன்னால் பறந்து போக முடியாது. அந்த முத்துக்களை நான் அடைகிறேனா இல்லையா என்று பார்!''

சிட்டுக் குருவி கலீர் என்று சிரித்தது. ''மூன்றாவது உண்மையா வேண்டும்? முதலில் நான் சொன்ன இரண்டு உண்மைகளையும் நீ கட்டோடு மறந்துவிட்டாயா? கையிலிருந்து நழுவியது குறித்துக் கவலைப்படாதே என்றும் நடக்க முடியாததை எதிர்பார்த்துக் காத்திருக்காதே என்றும் நான் சொல்லவில்லையா? முட்டாள் மனிதனே! என்னுடைய உடல், குடல், எலும்பு எல்லாம் சேர்த்தாலும் இருபது ரூபாய் எடை வராது. இப்படியிருக்க எனக்குள் இருபது ரூபாய் எடையுள்ள இரண்டு முத்துக்கள் இருப்பதாக எப்படி நம்புகிறாய்? முட்டாள்.''

அவ்வளவுதான், இமைக்கும் நேரத்தில் அது பறந்து போய்விட்டது. பேராசையுணர்வு மனிதனின் சிந்தனைக்கு எப்படித் தடை போடுகிறது என்பதை இந்தச் சிறு

கதை எடுத்துக் காட்டுகிறது. நல்ல மனம் படைத்தவர்கள் எதிர்பார்த்ததை அடைகிறார்கள். அவர்களைப் பற்றிக் கவலையில்லை. ஆனால் பேராசை கொண்டவர்கள் நடக்க முடியாததை நடக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள்; இறுதியில் ஏமாற்றமடைகிறார்கள்.

மனிதனின் பேராசையுணர்வு விசித்திரமானதுதான். தான் இந்த உலகில் நிரந்தரமாகத் தங்கப்போவது போலல்லவா அவன் முயற்சி செய்து பணம் சேர்க்கிறான்? மரணம் அவனை எந்த வினாடியும் அணுகலாம் என்பதை ஏன் மறந்து விடுகிறான்? எனவே மரணத்திற்குப் பிறகு பயன்படக்கூடிய விதத்தில் செலவு செய்துவிடுங்கள்! இப்போது நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் பணம் அப்போது நிச்சயமாகப் பயன்படாது.

பேராசை எனும் இந்த நோய் பொதுவாக எங்கும் காணப்படும் ஒன்று. இதைக் களைத்தெறிவதற்கு முயற்சி செய்கிறவர்களை எங்கும் காண முடியவில்லை.

இந்த நோயை கட்டோடு அழிப்பதற்கு நல்லதொரு மருந்து இருக்கிறது. ஆனால் அதை உட்கொள்ள மறுக்கிறார்களே பலர். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்?

# 6. மருந்து தேவையா?

எந்த நோய்க்கும் மருந்து இருப்பதுபோல இந்த நோய்க்கும் மருந்து இருக்கிறது. உங்களுக்கு இந்த மருந்து தேவையா? அப்படியானால் அடியிலுள்ளவற்றை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுங்கள்!

1. முதலில் சிக்கனமாக வாழப் பிரியப்படுங்கள்! இயன்ற வரை உங்கள் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்! செலவுகளைக் குறைப்பது எப்படி என்று கேட்கிறீர்களா? செலவுகள் குறைய வேண்டும் என்றால் தேவைகள் குறைய வேண்டும். எனவே தேவைகளை முதலில் குறைத்துக்கொள்ளுங்கள். செலவு தானாகக் குறைந்துவிடும். மேலும் மேலும் அதிகத் தேவைகளை ஏற்படுத்திக் கொள்கிறவர்களால் என்றைக்கும் சிக்கனமாக வாழ முடியாது.

இப்படிப் பார்க்கும்போது, தனி மனிதன் ஒருவன் குடும்பஸ்தனைவிட இந்த வழியில் நன்கு முன்னேற முடியும் என்றே நான் நினைக்கிறேன். தனி மனிதன் யாரையும் காப்பாற்ற வேண்டிய கடமையோ எவருக்கும் உணவு கொடுக்க வேண்டிய அவசியமோ அவனுக்குக் கிடையாது. தானுண்டு தன் வேலையுண்டு என்று அவன் தனிப்பட்ட முறையில் சுதந்திரமாக இயங்கலாம்.

அணிவதற்கு இரண்டு துணிகளும், படுத்துறங்குவதற்கு ஒரு பழைய பாயும், பசி தணிப்பதற்குச் சிறிது உணவும் தான் அவனுக்குத் தேவை. எனவே அவனால் நன்கு சிக்கனத்தைக் கைக்கொள்ள முடியும்.

குடும்பஸ்தன் இப்படி நடக்க முடியாது. ஆனால் அவனுக்கும் மார்க்கம் வழி வகுத்துத்தான் கொடுத்திருக் கிறது. கல்யாணத்திற்குப் பிறகுதான் வாழ்வே ஆரம்பமா கிறது. அப்படியிருக்க, கல்யாணத்திற்குப் பிறகு ஏற்படும் நிலைமைகளுக்கு விளக்கம் கொடுக்க வேண்டியது அவசியம் தானே.

குடும்பஸ்தர்கள் தமக்கும் தம் மனைவி மக்களுக்கும் போதிய அளவு பொருள் தேடுவதில் தவறில்லை. ஆனால் அவர்கள் சம்பாதித்த பொருளை ஊதாரித் தனமாக இரைத்துவிடாமல் சிக்கனத்துடன் வாழ வேண்டும். பெட்டி பெட்டியாகப் பணம் தேட வேண்டும் எனும் எண்ணம் அவர்களுக்கு வரவே கூடாது. அத்துடன் தம்மிடமுள்ள பொருள்களை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவி செய்ய வேண்டும். இதனால் தர்ம சிந்தனை வளரக் கூடும். இதற்குப் பெருமானார் (ஸல்) அவர்கள் பெரிதும் ஆதரவு கொடுத்திருக்கிறார்கள்.

2. உங்கள் பொருளாதார நிலை ஓரளவு சீர்பட்டதும் எதிர்காலத்திற்காகத் திட்டம் தீட்டத் தொடங்கி விடாதீர்கள்! பெரும்பாலோர் செய்யும் தவறு இது. நாளைக்கு நடக்கப் போவது குறித்து இன்றைக்குக் கவலைப்படாதீர்கள்! நடப்பது நடக்கத்தான் செய்யும். உங்கள் கவலைக்கு அதைத் திருத்தியமைக்கும் ஆற்றல் கிடையாது. இந்தத் தவற்றிலிருந்து தான் பேராசை



யுணர்வு முளைக்கிறது. எதிர்காலத்தின் பொறுப்பை இறைவனிடம் ஒப்படைத்து விடுங்கள்! அவன் செய்யும் தீர்ப்பை - அது எத்தகையதாயினும் சரி - ஏற்றுக் கொள்வது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். உங்கள் உள்ளம் முழுவதையும் ஆசைகளால் நிரப்பிவிடாதீர்கள்! மனிதன் ஆசைப்படுவதெல்லாம் நடந்துவிடும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. மனிதனின் வெற்று ஆசைக்கு அவ்வளவு பெரிய சக்தி இருந்தால் உலக வரலாறே மாறிப் போயிருக்கும். முடி துறந்த எந்த அரசனையும் வரலாற்றில் உங்களால் கண்டுபிடிக்க முடியாது. ஏனெனில் எந்த அரசனும் முடி துறக்க விரும்புவதில்லை.

உங்களுக்கு வந்து சேரவேண்டிய வருமானம் வரம்பு கட்டப்பட்ட ஒன்று. இறைவன் உங்கள் வருமானத்தை அளந்து வைத்திருக்கிறான். அந்த அளவுக்கு மேல் உங்களுக்குத் துளியும் கிடைக்காது. நீங்கள் கொண் டிருக்கும் பேராசை உங்கள் வருமானத்தை விரிவுபடுத்தி விடாது. நீங்கள் பேராசை கொள்வது நிச்சயமாக ஒரு வீண் வேலை.

இறைவன் உங்களுக்குக் கொடுத்திருக்கிறானே ஒரு வாக்குறுதி, அதை எண்ணிப்பாருங்கள்! ''உலகிலுள்ள உயிரினங்கள் அத்தனைக்கும் நாம்தான் உணவளிக் கிறோம்'' என்று அவன் கூறுவது உங்களுக்குக் கேட்க வில்லையா? இந்த வாக்குறுதியை அவன் என்றைக்கும் மீறமாட்டான் என்று உறுதியாக நம்புங்கள்!

ஆனால் எனக்கு நன்றாகத் தெரியும். இந்த அறிவுரைக ளெல்லாம் எதிர்பார்த்த பலனைக் கொடுத்துவிடப்

போவதில்லை என்று எனக்குச் சுத்தமாகத் தெரியும். அது உங்களுக்கும் தெரிந்ததுதானே?

இப்படி ஒரு மனிதன் பணத்தைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்ளும்போது அவன் மனம் என்ன சொல்கிறது தெரியுமா?

இதோ அவன் உள்ளம் அவனிடம் இரகசியமாகப் பேசுகிறது:

''தானமாவது, தர்மமாவது! தயாளசிந்தையாம் தயாள சிந்தை! யாருக்கு வேண்டும் இந்தச் சிந்தை? உன்னை வறுமையில் சிக்க வைத்து, ஒரு வாய்ச் சோற்றுக்குத் தாளம்போட வைக்கும் இந்தச் சிந்தையா உனக்கு வேண்டும்? அல்லும் பகலும் பாடுபட்டுச் சம்பாதித்த பணத்தையெல்லாம் தூங்கு மூஞ்சிகளுக்கு நீ எதற்காகத் தர்மம் செய்ய வேண்டும்?''

இப்படி அடுக்கடுக்கான வினாக்களை அள்ளி வீசியபடி தன்னுடைய அறிவுரையைத் துவக்குகிறது மனிதனின் மனம்.

அது தொடர்ந்து பேசுகிறது, கேளுங்கள்!

''இப்போது அப்படி ஒன்றும் விபரீதம் ஏற்பட்டு விடப் போவதில்லை. நெஞ்சில் உறுதியும் அவயங்களில் ஆரோக்கியமும் பெற்றிருக்கும் உன்னால் ஓயாது உழைக்க முடியும், நிறையச் சம்பாதிக்க முடியும், சம்பாதித்நதை மற்றவர்களுக்குக் கொடுக்க முடியும்.

''ஆனால் காலம் முழுவதையும் இப்படியே உன்னால் கழித்துவிட முடியாது. இப்போது இளைஞனாக இருக்கும் நீ ஒரு காலத்தில் வயோதிகனாக ஆகத்தான் போகிறாய். அப்போது நீ எப்படி இருப்பாய் என்று எண்ணிப் பார்த்திருக்கிறாயா? இப்போது உழைப்பது போல் அப்போது உன்னால் உழைக்க முடியுமா? இப்போது தர்மம் எனும் பெயரில் நீ செலவு செய்யும் ஒவ்வொரு செப்புக் காசும் உன்னுடைய வயோதிகத்தில் ஒவ்வொரு தங்கக் காசுக்கு நிகராக விளங்கும் என்னும் உண்மை உனக்குத் தெரியாதா? அந்த அவல நிலையில் பயன்படுவதற்காகச் சிறிது பணம் சேர்த்தால் அதில் தவறென்ன?



''வயோதிகம் கிடக்கட்டும். இன்று ஆரோக்கியத்துடன் இருக்கும் நீ, நாளைக்கே நோயாளியாகமாட்டாய் என்பது என்ன நிச்சயம்? வைத்தியனுக்குப் பணம் கொடுக்கவேண்டி ஏற்படும். பிரத்தியேக உணவுக்காகப் பணம் தேவைப்படும். அப்போது உனக்கு யாரும் உதவி செய்யமாட்டார்கள், உனக்குப் பரிகாரம் செய்த வைத்தியர் தனக்குச் சேர வேண்டிய பணத்தைத் தர்மக் கணக்கில் நிச்சயமாக எழுதமாட்டார்.

அப்படி எழுதுவதாயிருந்தால் எதற்காக அவர் வைத்தியத் தொழில் செய்யவேண்டும்?

''அப்போதுதான் உனக்குத் தெரியும் - மற்றவர்களிடம் உதவி பெறுவது எவ்வளவு அவமானம் நிறைந்தது என்று. இப்போது உன்னுடன் சேர்ந்து சிரித்து விளையாடும் நண்பர்கள் அப்போது உன்னைத் தனியே நிறுத்தி வைத்துக் கைகொட்டிச் சிரிப்பார்கள். காரணம் என்ன என்றா கேட்கிறாய்? இதற்கு இரண்டு காரணங்கள்: ஒன்று, உன்னிடம் பணமில்லை - உதவியை எதிர்பார்த்து நண்பர்களிடம் சென்றிருக்கிறாய். இரண்டு, அவர்களிடம்

பணம் இருக்கிறது - உன் உதவியை அவர்கள் எதிர்பார்க்க வில்லை. இத்தகைய நிலைமை ஏற்படாமல் தடுப்பது புத்திசாலித்தனமல்லவா?''

மனம் என்பது கற்பனை செய்யும் ஆற்றல் படைத்தது மட்டுமல்ல, முறைப்படி வாதம் செய்யத் தெரிந்தது மாகும். அதன் வாதத்திற்கு மறுப்புக் கொடுப்பது அப்படி ஒன்றும் சிரமமான வேலையல்ல. என்றாலும் நீங்கள் எது சொன்னாலும் சரி, அதை உங்கள் மனம் முழுமையாக ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சிறிது நாட்களுக்குப் பிறகு மீண்டும் அது வாதம் புரிய ஆரம்பிக்கும். இந்த மனப்போராட்டத்திற்கு எல்லையே கிடையாது.

ஒன்று மட்டும் நிச்சயம். எதிர்காலத்தைச் சமைக்கும் முழுத் திறமையும் பொறுப்பும் மனிதனிடமே இருக் கின்றன என்னும் தப்பான கருத்துத்தான் இந்த வாதத்தை ஆரம்பித்து வைக்கிறது. கடந்த காலத்தை எண்ணிப் பார்க்கும் மனிதன் ஓர் உண்மையைத் தெரிந்து கொள்கிறான். தான் அடைந்த வெற்றிகளுக்கெல்லாம் தன் திறமை மட்டுமே காரணமல்ல என்பதையும், தான் அடைந்த தோல்விகளில் மனிதனை மீறிய சக்தி ஒன்று எதிரில் நின்று வேலை செய்திருக்கிறது என்பதையும் அவன் ஏற்றுக்கொள்கிறான்.

இந்தக் கட்டத்தில், விரும்பியோ விரும்பாமலோ, மற்றோர் உண்மையை அவன் ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது. கடந்த காலத்தில் வேலை செய்த சக்தி எதிர்காலத்திலும் வேலை செய்யக்கூடும். கடந்த காலத்தில் வெற்றிக்குத் துணை செய்த சக்தி எதிர் காலத்திலும் செல்வத்திற்குத் துணை செய்யக்கூடும்.



இந்த உண்மையைத் தெரிந்துகொண்டவர்கள் எதிர் காலம் குறித்துக் கவலைப்பட்டது கிடையாது. மண்ணில் நெளியும் புழுவிற்கும், பறக்கும் பறவைக்கும் உணவு படைக்கும் இறைவனால் வயோதிகத்தை அடைந்த மனிதனுக்கு உணவு கொடுக்க முடியாதா? நோயைப் படைத்த இறைவனுக்கு நிவாரணமளிக்கத் தெரியாதா?

நீங்கள் இந்தப் படித்தரத்தில் இல்லை என்றால் அது யார் குற்றம்? ஒன்றுமே தெரியாமல் இங்கு வந்த உங்களை என்றைக்கும் துலங்கும் வைரங்களாக்கிய இறைவன்மீது நம்பிக்கை இல்லையா?

காலித் என்ற நபித் தோழரின் குமாரர்கள் இரு வருக்கும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிய அறிவுரைகள் எவ்வளவு உண்மையானவை!

''உணவு பற்றி - வருமானம் பற்றிக் கவலைப்படா தீர்கள்! மனிதனை அவன் தாய் திறந்த மேனியோடு, தற்காப்புக்கென்று எந்தப் போர்வையும் இல்லாத நிலையில்தான் பெற்றெடுக்கிறாள். அவனுக்கு இறைவன் தான் உணவளிக்கிறான்!''

இப்னு மஸ்ஊத் ஒரு நாள் கவலை தோய்ந்த முகத் துடன் நின்று கொண்டிருந்தார். அவ்வழியே சென்ற பெருமானார் (ஸல்) அவர்கள் ஏறிட்டுப் பார்த்தார்கள். கவலைக்குரிய காரணத்தை அவர்கள் தெரிந்திருக்க வேண்டும்.

''இப்னு மஸ்ஊத்!'' என்று கூப்பிட்டார்கள். ''வீணாகக் கவலைப்பட்டுக் கொண்டிருக்காதீர்! நடக்கக் கூடியது நடக்கத்தான் செய்யும். உமக்குக் கிடைக்க வேண்டியது எப்படியும் கிடைக்கத்தான் செய்யும்.''

மற்றொரு சமயம் பெருமானாரிடமிருந்து இந்தக் கருத்து வெளிவந்தது.

''பொருள் தேடுவதில் அதிக அக்கறை செலுத்தாதீர்கள்! இறைவன் வகுத்து வைத்த அளவுதான் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும். அதற்கிடையில் அவன் நிச்சயமாக இறக்கமாட்டான்.

மனிதனின் நல்வாழ்வுக்காக இறைவன் வகுத்து வைத்திருக்கும் வாழ்க்கை முறை அற்புதமானது. ஊன்றிப் பார்க்கிறவர்களுக்கு மட்டும் இந்த உண்மையை அறியும் பேறு கிடைத்திருக்கிறது. அவர்களைத் தவிர்த்து மற்றவர்களால் பேராசையுணர்வை தவிர்க்க முடியாது.

எனவே பேராசையுணர்வை நீங்கள் ஒழித்துக்கட்ட விரும்பினால் இறைவன்மீது நம்பிக்கை வையுங்கள்! உங்கள் வாழ்வில் உங்களைவிட இறைவனுக்குத்தான் அக்கறை அதிகம் என்று நம்புங்கள்! உங்கள் முயற்சியில் கிடைக்கும் வருமானத்தைவிட, இறைவனின் அன்பில் கிடைக்கும் வருமானம் அதிகம். இதையும் உணர்ந்து நம்புங்கள்! அப்புறம், பேராசையுணர்வு ஓரளவு குறையலாம்.

''ஒருவன் இறைவனுக்கு அஞ்சி நடந்தால் அவனுக்கு இறைவன் ஒரு வழியை ஏற்படுத்துவான்: அவனால் எண்ணிப் பார்க்க முடியாத விதத்தில் வருமானம் கொடுப்பான்'' எனும் இறைக் கருத்தை ஆராய்ந்து பாருங்கள்! உங்களுக்கு வருமானம் வந்த வழி மூடப்பட்டுவிட்டதா? அதற்காகக் கவலைப்படாதீர்கள்! இறைவனுக்கு அஞ்சி ஒழுகுங்கள்! மூடிக்கிடக்கும் கதவையே கவலையோடு



பார்த்துக்கொண்டு நிற்காதீர்கள்! புது வழி ஒன்று உங்களுக்குப் பின்னால் திறக்கக் கூடும். எந்தப் பக்கம் கதவு இருக்கிறது என்று உங்களுக்கு எப்படித் தெரிய முடியும்?

''எதிர்பாராத விதத்தில்தான் மனிதனுக்கு இறைவன் வருமானம் கொடுக்கிறான்'' எனும் நபிக் கருத்து இதனைத் தெளிவுபடுத்துகிறது.

''இறைவனுக்கு அஞ்சி ஒழுகு! ஒழுக்கமுள்ள எந்த மனிதனுக்கும் பிறருடைய உதவி தேவையில்லை!'' என்று குறிப்பிடுகிறார் சுப்யான் சவ்ரீ.

''உன் வருமானம் என்ன?'' என்று முப்ஸல் கேட்டார்.

அருகில் நின்ற கிராமவாசி பதிலளித்தார்: ''மக்காவிற்கு வருகிறார்களே முஸ்லிம்கள், அவர்கள் செய்யும் தருமமே என் வருமானம்.''

''மக்காவிலிருந்து அவர்கள் வெளியேறிவிட்டால் என்ன செய்வாய்?'' இது இரண்டாம் கேள்வி.

கிராமவாசியின் கண்கள் கண்ணீரை உகுத்தன. ''அதெல்லாம் யாருக்குத் தெரியும்? நாம் எதிர்பார்த்த வழியில் தான் வருமானம் வரவேண்டும் என்றிருந்தால் நம்மால் வாழவே முடியாது!''

அறிஞர் அபூ ஹாஸிம் வாழ்க்கைத் தத்துவம் ஒன்றை அடியில் விளக்குகிறார்:

''உலகத்தில் இருப்பதெல்லாம் இரண்டே பொருள்கள். ஒன்று, எனக்காக உள்ள பொருள், அது எனக்கு

நிச்சயம் கிடைக்கும். ஆனால் நேரம் வருவதற்குமுன் அதை அடைய நான் முயற்சி செய்யமாட்டேன், என்ன முயன்று என்ன பயன்? நேரம் வருவதற்குமுன் நிச்சயமாக அது எனக்குக் கிடைக்கப் போவதில்லை. மற்றொன்று, மற்றவர்களுக்காக உள்ள பொருள். அது மற்றவர்களின் பெருளல்லவா? அது எனக்குக் கிடைக்கத் தவறி விட்டது. இனிமேல் கிடைக்கப் போவதுமில்லை. அதற்கு நான் ஆசைப்படபோவதுமில்லை. என் பொருள் மற்றவர் களுக்குக் கிடைக்க முடியாததுபோல், மற்றவர்களின் பொருளும் எனக்குக் கிடைக்க முடியாது.''

இப்படி எல்லாக் கோணங்களிலிருந்தும் சிந்தனை செய்து பாருங்கள்! அப்புறம் வறுமை உங்களை அச்சுறுத் தாது; பேராசையுணர்வு உங்களைத் தீண்டாது.

3. சிக்கனமாக வாழ்வது எவ்வளவு சிறப்பு மிக்கது என்று சிந்தித்துப் பாருங்கள்! பேராசையாலும் மற்றவர் களின் கையை எதிர்பார்ப்பதாலும் ஏற்படும் விளைவு களை எண்ணிப் பாருங்கள்! நீங்கள் அனுபவப்பட் டிருந்தால் உங்களை நீங்களே உற்றுப்பாருங்கள்! அனுபவம் இல்லையேல் அனுபவமடைந்தவர்களின் வாழ்க்கையை நினைத்துப் பாருங்கள்! இந்தச் சிந்தனையிலிருந்து மகத்தான பல அறிவுகள் உங்களுக்குக் கிடைக்கலாம்.

இப்படி ஏற்படும் அறிவு புனிதமானது. அது வலு வடையும்போது சிக்கனத்தில் ஆர்வம் ஏற்பட்டுவிடும். ஏனெனில் பேராசையால் உந்தித் தள்ளப்படும்போது



பலதரப்பட்ட தொல்லைகள் உருவாகின்றன. அவற்றைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி சிக்கனம்தான்.

மற்றவர்களின் கையை எதிர்பார்த்து எதையும் சாதித்துவிட முடியாது. அப்போது ஏற்படும் அவமானத்தை உங்களால் பொறுத்துக்கொள்ள முடியாது. சிக்கனத்திலும் ஒரு வித வேதனையுண்டு. மனத்தைக் கட்டுப்படுத்திப் பொறுமையோடு இருக்கவேண்டிய வேதனை. ஆனால் இந்த ஒன்றைத் தவிர்த்துச் சிக்கனத்தில் வேறு எந்த வேதனையும் கிடையாது. இதை நீங்கள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டும்.

பொறுமை என்பது வேதனை நிறைந்த செயல்தான். ஆனால் அதில் மறைந்திருக்கும் பெருமைக்கு எல்லை ஏது? அதற்காக இறைவன் கொடுக்கும் நற்கூலிக்கு வரம்பு ஏது? இந்த உண்மைகளையெல்லாம் நம்மில் எத்தனை பேர் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்கள்? மறுமைக்குரிய பெரும் செல்வம் பொறுமையில் மறைந்திருக்கிறது.

மக்கட் திரளில் பெரும்பாலோர் குறுக்கு வழியில்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். பேராசையினால் உந்தித் தள்ளப்பட்டிருக்கும் அவர்கள் மக்களோடு மிக நெருக்க மாக உறவு கொள்ளவேண்டி ஏற்படுகிறது. இதனால் அவர்கள் இறைவனைக் கட்டோடு மறந்து விடுகிறார்கள்.

''மக்களில் எவருடைய உதவியையும் எதிர்பார்க்கா மல் தனித்து இயங்குகிறவனே உண்மையான முஸ்லிம்!'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியிருப்பது இந்த இடத்திற்கு மிகப் பொறுத்தமான ஒன்று என்பது என் கருத்து. பேராசை கொண்டவர்களால் இப்படித் தனித்து

நின்று செயல்பட முடியாது. ஆனால் சிக்கனமாக வாழ்கிறவர்கள் என்றைக்கும் நாணயத்தோடு வாழலாம். சந்தேகப்பட வேண்டாம். வரலாற்று நூல்களைப் படியுங்கள்! குழப்பம் மறையும்; தெளிவு பிறக்கும்.

சிக்கனம் என்பது நாணயத்தையும் கண்ணியத்தையும் மட்டும் தானா கொண்டு வருகிறது? இல்லவேயில்லை; மனிதனுக்கு அதுதான் சுதந்திரத்தையும் கொடுக்கிறது. சிக்கனமுள்ளவன் என்றும், எங்கும் சுதந்திர உணர்வோடு தலை நிமிர்ந்து வாழலாம். மற்றவர்களின் கையை எதிர் பார்க்கிறவர்களுக்கு இது கொஞ்சமும் சாத்தியமில்லை. நேற்றுக் காலை தணிந்து குனிந்து மற்றவர்களிடம் உதவி தேடிய உங்களால் இன்று மாலை எப்படித் தலை நிமிர்ந்து நடக்க முடியும்? எண்ணிப் பாருங்கள்!

இதோ ஒரு முதுமொழி வாழ்வின் முழுத் தத்துவத்தை யும் சில வரிகளில் காட்டுகிறது.

''உதவி தேடாதே! மற்றவர்களைப்போல் நீயும் கண்ணியம் அடைவாய். எவரிடம் உதவி பெறுகிறாயோ அவருக்கு நீ அடிமையாகிவிடுவாய். மற்றவர்களுக்கு உதவி செய்! அப்புறம் நீயே அவர்களுக்கு அரசன்.''

4. யூதர்களும் கிறிஸ்தவர்களும் எப்படி வாழ்ந்தார்கள். எந்தெந்த இன்பங்களை எப்படியெப்படி அனுபவித் தார்கள் என்று எண்ணிப் பாருங்கள்! மக்களின் கண் ணோட்டத்தில் தாழ்ந்துபோன சமுதாயத்தினரின் வாழ்க்கை முறைகளைக் கவனித்துப் பாருங்கள்! இந்தச் சிந்தனையிலிருந்து உங்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பல உண்மைகள் வெளிப்படக்கூடும்.



அப்புறம், திருத்தூதர்கள், இறையன்பர்கள் முதலான வர்களின் வாழ்க்கையை ஊன்றிக் கவனியுங்கள்! அபூ பக்கர் (ரலி), உமர்(ரலி), உதுமான்(ரலி), அலீ(ரலி) போன்ற மதிப்பு மிக்க நபித் தோழர்களைப் பற்றிச் சிந்தனை செய்து பாருங்கள்! அவர்கள் கூறிய பொன் மொழிகளைத் தேடி எடுங்கள்! அவர்களது வாழ்வின் கோணங்கள் அனைத்தை யும் சிந்தனையில் வைத்து நிறுத்துப் பாருங்கள்!

இந்த இரண்டு தரத்தாரைப்பற்றியும் நீங்கள் முறைப் படி எண்ணிப் பார்த்தால் அப்புறம் யாரைப் பின்பற்றுவது என்று நன்கு தெரிந்து போய்விடும். மனித இனத்திற்குப் பெருமை கொடுத்தவர்களைப் பின்பற்றுங்கள்! மனித வாழ்வை உயர்த்தி வைத்த மகான்களுக்கு மதிப்புக் கொடுத்து அவர்கள் நடந்தது போல் நடக்கப் பழ குங்கள்!

உணவு வகைகளைப் பார்த்துத் திருப்தியடையா தீர்கள். உங்களைவிட அதிகமாகச் சாப்பிடும் மிருகங்கள் எத்தனையோ இருக்கின்றன. நீங்கள் அணியும் உடை களிலும் அப்படியொன்றும் தனிச் சிறப்பு கிடையாது. உங்களுடன் யூதர்கள் போட்டி போடுகிறார்கள். நீங்கள் அணிவதைவிட அவர்கள் உயர்ந்த உடைகளை அணி கிறார்கள்.

நீங்கள் பெருமையடைய விரும்பினால் சிக்கனத் துடன் வாழுங்கள்! உங்களுடன் யாரும் போட்டிபோட

மாட்டார்கள் - திருத்தூதர்களையும் இறையன்பர்களையும் தவிர்த்து.

5. சம்பாதித்த பணத்தை அப்படியே சேர்த்து வைக்கும்போது ஏற்படும் ஆபத்துக்களை எண்ணிப் பாருங்கள்! பணத்திற்கு எந்த வினாடியும் திருடர்களின் ஆபத்து உண்டு என்பதை நான் எழுதித்தானா நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும்? பணமற்றவர்கள் அனுபவிக்கும் அமைதியையும் ஆனந்தத்தையும் பணம் பெற்றவர்கள் ஏன் இழந்து விடுகிறார்கள் என்று நீங்கள் எப்போதாகிலும் சிந்தனை செய்து பார்த்ததுண்டா?

ஏழையொருவன் அமைதியடைவது எப்படி? பணக்காரனைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது; தன்னை விட வறியவனைப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். அவன் மேலே பார்க்கக் கூடாது, கீழே பார்க்க வேண்டும். ஆனால் பெரும்பாலோர் இப்படி நடப்பதில்லை. அவர்கள் என்றும் மேலே பார்க்கிறார்களே தவிர என்றைக்கும் கீழே பார்ப்பதில்லை.

மனத்தின் கூக்குரலுக்குப் பதில் கொடுக்காதீர்கள்! ஏனெனில் இதுபோன்ற வேளைகளில் அதன் குரலில் நேர்மை இருக்காது. ''அதோ அந்த மனிதனைப் பார்! அவன் உன்னைவிட மார்க்கத்தை நன்கு உணர்ந்தவன். அவன் இந்த வழியில் நடக்காதபோது நீ மட்டும் ஏன் துன்பப்பட வேண்டும் என்று அது கேட்கிறதா? அது அப்படித்தான் கேட்கும். ஆனால் நீங்கள் செய்யும் குற்றங்களுக்கு நீங்கள்தான் தண்டனை அனுபவிக்க வேண்டும். யாரைப் பார்த்துச் செய்தாலும் செய்த குற்றத்திற்குத்



தண்டனை பெற வேண்டியவர்கள் நீங்கள் தாம். இதை நீங்கள் என்றும் மறந்துவிடக் கூடாது.

உங்களைச் சுற்றியிருக்கும் மக்கள் சிக்கனத்தைப் பொருட்படுத்தாமல் ஊதாரித்தனமாக நடக்கிறார்களா? அதற்காக நீங்கள் ஏன் கவலைப்பட வேண்டும்? தாம் செய்யும் தவறுகளுக்கு இம்மையிலும் மறுமையிலும் துன்பம் அனுபவிக்க வேண்டியவர்கள் - தண்டனை பெற வேண்டியவர்கள் அவர்கள் தாம்; நீங்கள் அல்ல.

ஆனால் அவர்களைப் பார்த்து நீங்களும் தவறு செய்ய ஆரம்பித்துவிடாதீர்கள்! அப்புறம் நீங்கள் குற்றவாளியாகி விடுவீர்கள். நீங்கள் தண்டனை பெறும்போது அவர்கள் வந்து உதவி செய்ய மாட்டார்கள்; நினைவிருக்கட்டும்!

''உங்களில் யாரும் தன்னைவிடப் பணத்திலும் குணத்திலும் உயர்ந்து நிற்பவர்களைப் பார்த்துப் பொறாமைப் படக் கூடாது. உங்களைவிடக் குணத்திலும் பணத்திலும் தாழ்ந்தவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்!'' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருக்கிறார்கள்.

இதுபோன்ற சிந்தனைகளால் ஓரளவு சிக்கன மனப்பான்மை ஏற்படும் என்று நான் நினைக்கிறேன். ஆனால் இந்த வழியில் வெற்றியடைய விரும்புகிறவர்கள் பொறுமைக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். மனத்திலிருக்கும் ஆசைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.

பொறுமை என்பது கசப்பான ஒரு மருந்துதான். யார் இல்லை என்று சொன்னது? ஆனால் தம்மிடமுள்ள

நோயை அழிக்க எண்ணுகிறவர்கள் சிறிது நாட்களுக்குக் கசப்பான மருந்தைக் குடிப்பதில்லையா? நிரந்தரமான மறுமை வெற்றியை மனத்தில் கொண்டு சிறிது காலத்திற்கு உங்களால் பொறுமையோடிருக்க முடியாதா? மறுமையின் இன்பங்களுக்காக உங்களால் இம்மையின் இன்பங்களைத் தியாகம் செய்ய முடியாதா?

# 7. வரலாற்றில் ஒரு பகுதி

''பறக்கிற மனிதனுக்கும் பணத்தில் அக்கறையுண்டு'' என்று பொதுமக்கள் பேசிக் கொள்கிறார்கள். இது நம்மிடையே ஒரு முதுமொழியின் இடத்தைப் பிடித்திருக் கிறது. நம்மைச் சுற்றி நடக்கும் சம்பவங்களைப் பார்க்கும்போது இந்தச் சொற்றொடரில் ஓரளவுக்கு உண்மை இருப்பது தெரிகிறது.

ஆனால் இது யாரைப் பொறுத்த மட்டில் உண்மை யாக இருந்தாலும், அன்னை ஆயிஷா (ரலி) அவர்களைப் பொறுத்தமட்டில் இது பொய்த்துப் போய்விட்டது.

அவர்கள் ஒருநாள் முஆவியாவிடமிருந்து வந்திருந்த பெருந்தொகை ஒன்றைப் பொதுமக்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மஞ்சள் நிறத்தில் மங்கிய ஒளியைக் கொடுத்துக் கொண்டிருந்த சூரியன் மேல் திசையில் இறங்கிக் கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் பங்கீட்டு வேலை முடிந்தது. திடீரென்று நினைவு வரவே, ''மறந்துவிட்டேன், நோன்பு திறக்க வேண்டுமல்லவா? ஏதாவது இருந்தால் கொண்டுவா!'' என்று கூறினார்கள்.

அருகிலிருந்த தோழி புன்னகை செய்தார். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு கோதுமை ரொட்டியும் கொஞ்சம் எண்ணெய்யும் கொண்டுவந்து வைத்தார்.

''இவ்வளவு பணத்தை இன்று பங்குபோட்டுக் கொடுக்காதீர்களே, அதிலிருந்து கொஞ்சம் இறைச்சி வாங்கியிருக்கக் கூடாதா?'' என்று கேட்டார் உம்மு தாரா.

அன்னை ஆயிஷா (ரலி) சட்டென்று விடை கொடுத் தார்கள். ''நான் மறந்துவிட்டேன். அப்போது நீ நினைவு படுத்தியிருந்தால் நான் வாங்கியிருப்பேன்!'' - அன்னை ஆயிஷா(ரலி)யின் உயர்ந்த மனப்பண்பு இங்கு பலிச்சிடுகிறது. பெருமானாரின் மனைவியாரல்லவா?

- இந்த சம்பவத்தை நமக்குத் தருகிறவர் முஹம்மது இப்னு முன்கதிர்.

நபித் தோழர்களின் காலத்தில் வேடிக்கையான சம்பவம் ஒன்று நடந்தது. ஆனால் உற்றுப்பார்க்கிற வர்களுக்கு அதில் வேடிக்கை தெரியவில்லை; பணத் தைப் பொருட்படுத்தாத - செல்வத்தைப் பொருட் படுத்தாத உயர்ந்த பண்பு தெரிகிறது,.

உபைதுல்லாஹ் இப்னு அப்பாஸை ஒருவர் திண்டாட வைக்கத் திட்டம் தீட்டினார். ஒரு நாள் அவர் குறைஷிப் பிரமுகர்களிடமெல்லாம் சென்று, ''உங்களை இன்று விருந்துக்கு அழைக்கிறார் உபைதுல்லாஹ் - மறக்காமல் வந்துவிடுங்கள்!'' என்று அழைப்பு கொடுத்துவிட்டார்.

அன்று உபைதுல்லாஹ் ஒன்றும் புரியாமல் திகைத்து நின்றார். அவரது வீட்டில் ஊர்ப் பிரமுகர்களெல்லாம் நிறைந்து வழிந்தார்கள். இறுதியில் ''ஆமாம், இதெல்லாம் என்ன?'' என்று கேட்டார்.



திட்டம் தீட்டியவர் சிரித்துக்கொண்டே பதிலளித்தார். ''இதற்கெல்லாம் காரணம் நான்தான். அவர்களை எல்லாம் நீங்கள் விருந்துக்கு அழைத்திருப்பதாக நான்தான் சொல்லிவிட்டு வந்தேன்.''

உபைதுல்லாஹ் பெருந்தன்மையோடு சிரித்துக் கொண்டார். ''அப்படியா? எனக்குத் தெரியாதே - சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்வோம்!'' உடனே சம்பந்தப் பட்டவர்களுக்குக் கட்டளைகள் பறந்தன.

அடுத்த சில வினாடிகளில் விருந்துக்கு வேண்டிய வேலைகள் துரிதமாக நடந்தன. பழங்கள் வாங்கி வரப்பட்டன. ரொட்டிகள் சுட்டு அடுக்கப்பட்டன.

விருந்து முடிந்தது. உபைதுல்லாஹ் மகிழ்ச்சியோடு காணப்பட்டார். பணியாட்களைப் பார்த்துக் கேட்டார்: ''இது போன்ற உணவு தினம் கிடைக்குமா?''

''கிடைக்கும்!'' என்று பதிலளித்தார்கள்.

உபைதுல்லாஹ் கூறியது யாரும் எதிர்பார்க்காத பதில் தான். ''அப்படியானால், இந்த விருந்தாளிகள் தினம் நம்மிடம் சாப்பிடட்டுமே.''

- இந்தச் சம்பவம் அபான் இப்னு உதுமானின் வழியில் நமக்குக் கிடைத்திருக்கிறது.

தேவாலயத் தரிசனத்திற்கென்று ஒரு சமயம் மக்கா விற்குச் சென்றிருந்த முஆவியா மதீனமாநகர் வழியாகத் திரும்பிக் கொண்டிருந்தார். இந்தச் செய்தி மதீனா முழுவதும் பரவிற்று. ஹுஸைன் (ரலி) கூறினார்கள். ''முஆவியா இங்கு வந்திருக்கிறாராம். அவரை நீங்கள் சந்திக்க வேண்டாம். எதிரில் பார்த்துவிட்டால் 'சலாம்' சொல்ல வேண்டாம்!'' - இவை அண்ணனைப் பார்த்துத் தம்பி கூறிய வார்த்தைகள்.

ஆனால் ஹஸன் (ரலி) அதைக் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. ''அதெப்படி முடியும்? நாம் கடன் பட்டிருக்கிறோம் என்பதை நீ மறந்துவிட்டாயா? நாம் பட்ட கடனை நாம்தானே நிறைவேற்ற வேண்டும்?''

அடுத்த சில வினாடிகளில் ஹஸனும் முஆவியாவும் சந்தித்தார்கள். ஹஸன் 'சலாம்' சொல்ல அதற்கு முஆவியா பதில் கூறினார். 80,000 தங்க நாணயங்கள் கொட்டி வைக்கப்பட்டன. அதாவது இரண்டு இலட்சம் ரூபாய்!...

- இந்தக் குறிப்பு முஸ்அப் என்ற நபித் தோழரிடமிருந்து இங்கு வந்திருக்கிறது.

ஹஸன்(ரலி) அவர்களின் மனப்பாண்புக்கு அடியிலுள்ள சம்பவம் சான்று கூறுகிறது.

அவர்களிடம் ஒருவர் உதவி கோரினார். ஹஸன் (ரலி) அவரை ஏறிட்டுப் பார்த்துப் புன்முறுவல் பூத்தார்கள். ''என்னிடம் நீர் உதவி கேட்பது பெரிய காரியமாகும். உமக்கு எதைக் கொடுப்பது என்று தீர்மானிப்பது அதைவிடப் பெரிய காரியமாகும்.''

உதவி கேட்டவர் எதுவும் பேசவில்லை.

ஹஸன் (ரலி) தொடர்ந்து பேசினார்கள்:

''உமக்கு எதைக் கொடுக்க வேண்டுமோ அதைத்தான் நான் கொடுக்க வேண்டும். உம் தகுதிக்குத் தக்கவாறு உதவி செய்வது இப்போது எனக்குச் சாத்தியம் தானா என்பதுதான் பிரச்சினை. பெரிய அளவில் உதவி செய்வது இறைவனுக்கு அற்ப காரியம். ஆனால் அப்படி என்னால் உதவி செய்ய முடியுமா? ஏதோ என்னால் இயன்றதைச்



செய்கிறேன். திருப்தியோடு ஏற்றுக் கொள்வீரா?''

வந்தவர் நெகிழ்ந்து போனார். ''பெருமானாரின் பேரரே! தங்கள் உதவியை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். தாங்கள் கொடுப்பது எதுவானாலும் அதற்கு நான் அவசியம் நன்றி செலுத்துவேன்...''

ஹஸனின் முகம் மலர்ந்தது. ''மகிழ்ச்சி... சற்றுப் பொறும்!'' அவர்களின் காரியதரிசி அழைக்கப்பட்டார். அவர்களது செலவினங்கள் பற்றிய கணக்குகள் அலசி ஆராயப்பட்டன. கணக்கு வேலை முடிந்தது.

''அப்படியானால், கொஞ்சம் பணம் மிஞ்சியிருக்கிறது. 75,000 ரூபாயில் மிஞ்சியிருப்பதைக் கொண்டு வாரும்!''

சிறிது நேரத்தில் காரியதரிசி 12,500 ரூபாய் கொண்டு வந்து எதிரில் வைத்தார்.

ஹஸன் (ரலி) கேட்டார்கள்: ''இவ்வளவுதானா? கணக்குப்படி ஏறத்தாழ இன்னும் இரண்டாயிரம் ரூபாய் இருக்க வேண்டுமே, அதை என்ன செய்தீர்?''

''என்னிடம் தான் இருக்கிறது.''

''அதையும் கொண்டு வாரும்!''

சற்று நேரத்திற்கெல்லாம் ரூ.14,500 கொண்ட பண முடிப்பு ஒன்று உதவி கேட்டுவந்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

''ஆமாம், இதையெல்லாம் நீர் எப்படி எடுத்துச் செல்லப் போகிறீர்? கூலியாட்கள் வேண்டுமே, இவற்றைச் சுமந்து செல்ல!'' என்று ஹஸன் (ரலி)வினவினார்கள்.

இரண்டு கூலியாட்கள் அழைத்து வரப்பட்டார்கள். பணமூட்டை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கவலையோடு ஹஸன் (ரலி) கேட்டார்கள். ''இறைவன்மீது ஆணை. இப் போது நம்மிடம் ஒரு வெள்ளிக் காசுகூடக் கிடையாது...''

இந்தக் கட்டத்தில் ஹஸன் (ரலி) அவர்கள் கூறிய வார்த்தைகள் என்றைக்கும் மறக்க முடியாதவை. ''பரவா யில்லை. எல்லாம் வல்ல நாயனிடம் நான் மகத்தான நற்கூலியை எதிர்பார்க்கிறேன். அது நமக்குப் போதும்!''

மற்றொரு சம்பவம்: இந்தச் சம்பவம் இப்னு அப்பால் அவர்கள் பஸராவுக்கு அதிகாரியாக இருந்தபோது நடந்தது. ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் எல்லோரும் அன்று இப்னு அப்பாஸைச் சூழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவர் கூறினார்: ''அவன் நிரம்பவும் நல்ல மனிதன். முறைப்படி நோன்பு பிடிக்கிறான். இறை வணக் கத்தில் குறை வைப்பதில்லை. அவனைப்போல் ஆக வேண்டும் எனும் எண்ணம் எங்களில் ஒவ்வொரு வருக்கும் உண்டு. ஆனால் இப்போது அவன் ஒரு சிக்கலில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறான். அவன் மகளுக்கும் அவனுடைய சகோதரன் மகனுக்கும் கல்யாணம். பெண்ணுக்கு வேண்டிய சாமான்கள் நிறையத் தேவைப்படுகின்றன. ஏழையான அவன் பெரிதும் துன்பப்படுகிறான்...''

இப்னு அப்பாஸ் விருட்டென்று எழுந்தார்கள். அறைக்குள் சென்று பெட்டியைத் திறந்தார்கள். நாண யங்கள் நிரம்பிய ஆறு தட்டுகளை அவர்கள் சுமந்து வந்து, ''இதைக்கொண்டுபோய் அவரிடம் கொடுத்து அவருடைய கவலையைத் தீருங்கள்!'' என்றார்கள்.



எல்லோரும் புறப்பட்டார்கள். இப்னு அப்பாஸும் வந்தார்கள். ''வாருங்கள் போவோம். அவருக்கு நம்மால் இயன்ற அளவு ஒத்தாசை செய்வோம். அவரது கவலை இறைவணக்கத்திற்குக் குறுக்கே நிற்கக் கூடாது. இறையன்பர்களை நாம் எப்போதும் மதிக்க வேண்டும். நம்முடைய பெருமையும் பதவியும் அதற்குக் குறுக்கே வரக்கூடாது.''

இத்தகைய வரலாற்றுக் குறிப்புகள் ஏராளமாக இருக்கின்றன. அனைத்தையும் இங்கு இடம் பெறச் செய்வது அசாத்தியமான ஒன்று. இஸ்லாத்தைப் பின் பற்றியவர்கள் எப்படி மாணிக்கங்களாகத் திகழ்ந்தார்கள் என்பதைக் காட்டுவதற்காகவே இந்த அத்தியாயத்தை எழுதுகிறேன். பணத்தைப் பொருட்படுத்தாமல் வாழ்ந்து, வாழ்க்கைக்கே ஓர் இலக்கணத்தை வகுத்து வைத்துவிட்டு மறைந்துப்போன தயாளர்களின் வரலாறு உங்களுக்குப் பெரிதும் பயன்படக் கூடும்.

அவர்கள் உயர்ந்த பண்புள்ளவர்கள். எனவே அவர் களுக்கு இறைவனின் அன்பு எப்போதும் இருக்குமாக! பண்பில்லாதவர்களைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர்களின் குற்றங்களை இறைவன் மன்னிக்கட்டும்.